Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 153 | வியாழக்கிழமை 28 ஏப்ரல் 2022 | சித்திரை 15 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ. 40

### ஜனாதிபதியும், அமைச்சரவையும் பதவி விலகக்கோரி

# இன்று முடங்குகிறது நாடு!

- பலநூறு தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு
- அரச, தனியார் துறைகளும் ஆதரவு
- மக்களின் குரலுக்கு செவிசாய்க்குமாறு வலியுறுத்து

கொழும்பு, ஏப்ரல் 28
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் தற்போதைய அரசாங்கத்தைப் பதவி விலக வலியுறுத்தி இன்று நாடளாவிய ரீதியில் பல தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப் புப் போராட்டத்தை அறிவித்துள்ளன. இந்த அறிவிப்பால் நாட்டின் இயல்புநி லைமை இன்று முற்றாகச் செயலிழக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 15 ➤

## ரயில்வே, தபால் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஏப்.28
நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட் டங்களை வலுப்படுத் 15 ➤

## போக்குவரத்து சேவைகள் வழமைபோன்று

கொழும்பு, ஏப்.28
இன்று நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முன் னெடுக்கப்படுகின்ற 13 ➤

## 'ஏ.ரீ.எம்.' தடை: வெளிநாடுகளில் உள்ளோர் இக்கட்டில்!

கொழும்பு, ஏப்.28
தன்னியக்க பணப்பரிவர்த்தனை இயந்திரங்கள் ஊடாக வங்கி அட் டைகளைப் பயன்படுத்தி 13 ➤

### தென்னிலங்கை மக்களே!

# உங்களைப் புரிந்துகொள்கிறோம் எங்களையும் புரிந்துகொள்ளுங்கள்!

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28
இலங்கை மிக அண்மைய நாள்களில் மிகப்பெரிய நெருக்கடி நிலையைச் சந்தித்து வருகின்றது. இந்த நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமான தமிழ் மக்கள் மீது காலம்காலமாக கட் டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள் இன்றுவரை தொடர்ந்துவ ருவது வேதனைக்குரியது என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்ட மைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. 15 ➤

## 355 பேருக்கு ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.28
கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கு நிய மனம் வழங்கும் நிகழ்வு 15 ➤



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் 17ஆவது நினைவு தினம் அண்மிக்கும் நிலையில், கொழும்பு ஆர்ப்பாட்டக் களத்துக்கு அருகே ஜனாதிபதி செயலகத்தின் முன் ஆர்ப்பாட்டக்காரர்களால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலா ளர்களின் ஒளிப்படங்கள் பொலிஸாரால் நீக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## நாட்டை வீழ்த்தியவர்கள் விலகிச்செல்லவேண்டும்

### இ.த.ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.28
நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரண மானவர்கள் பதவி வில கிச் செல்வதே சிறந்தது என்று இலங் 15 ➤

## மக்களின் கோரிக்கை உதாசீனம்; சர்வகட்சி அரசு அமைக்க முயற்சி

### கட்சித் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பினார் ஜனாதிபதி கோத்தாபய

கொழும்பு, ஏப்.28
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அமைச் சரவை பதவி விலக வேண்டும் என்று 15 ➤

## பதவி விலகுமாறு ஜனாதிபதி ஒருபோதும் கூறவேஇல்லை!

### பிரதமர் மஹிந்த சத்தியம்

கொழும்பு, ஏப்.28
பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒருபோதும் தன்னிடம் கூறவில்லை 15 ➤

## ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு பொலிஸாரைக் கூண்டோடு கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஏப்.28
ரம்புக்கனையில் இடம்பெற்ற அரசாங்கத் துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது, ஆர்ப் பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் 15 ➤

## இலங்கையை சூறையாடியோரின் தகவல்கள் அம்பலப்படுத்தப்படும்

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.28
இலங்கையின் வளங்கள் சூறையாடப்பட்டமைக்கு பொறுப்புக்கூற வேண்டிய வர்கள் தொடர்பிலான தக வல்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க 13 ➤

## 22 வயது இளைஞன் சாவு! வீடியோ கேம் விபரீதமா?

இளவாலையில் 22 வயது இளைஞன் தவ றான முடிவெடுத்து தனது 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்வர்களுடன் 'டீல்' இல்லை



## சஜித் மீண்டும் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 28

**நாட்டை அழித்த கள்வர்களுடன் எனக்கு எந்தவித அரசியல் டீலும் கிடையாது. அவர்களுடன் இணைந்து ஆட்சி அமைக்கப்போவதும் இல்லை. மக்கள் பக்கமே நான் நிற்பேன்- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று திட்டவட்டமாக அறிவித்தார்.**

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவுடன் அரசியல் டீல் இருப்பதாலேயே இடைக்கால அரசுக்கு சஜித் எதிர்ப்பை வெளியிடுகின்றார், நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தாமதிக்கின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே சஜித் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'இன்று (நேற்று) சர்வதேச காகங்கள் தினம். எமது நாட்டிலுள்ள அரசியல் காகங்களால் வீசப்படும் எலும்புத் துண்டுகளைத் துவைத்து, மக்கள் பணத்தைச் சுருட்டியவர்கள் தான் இன்று எம்மீது விமர்சனத்தை முன்வைக்கின்றனர். அரசியல் டீல் பற்றிக் கதைக்கின்றனர்.

ஆளுங்கட்சிக்குள் இன்று நாடகம் அரங்கேற்றப்படுகின்றது. ஜனாதிபதி இருக்கட்டும், பிரதமர் பதவி விலகட்டும் என ஒரு தரப்பும், பிரதமர் இருக்கட்டும், ஜனாதிபதி ஒதுங்கட்டும் என மற்றுமொரு தரப்பும் வலியுறுத்த ஆரம்பித்துள்ளன.

அரசியலில் வங்குரோத்து அடைந்துள்ள ஒருசிலர், எமது முதுகில் ஏறிச் சவாரி செய்ய முற்படுகின்றனர். எங்களிடம் 'டீல்' அரசியல் எடுபடாது. கள்வர்களுடன் அரசியல் கூட்டுக்கு நாம் தயாரில்லை.

மக்கள் வழங்கும் ஆணையின் பிரகாரமே ஆட்சி அதிகாரத்தை நாம் பொறுப்பேற்போம். மக்கள் அதற்கான அனுமதியை வழங்கும் வரை நாம் காத்திருப்போம்- என்றார். (ஒ-44)

# அரசியல் உறுதித்தன்மைக்காக ஒன்றிணைந்து செயற்படத்தயார்

## மகாசங்கத்தினரிடம் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28

நாட்டைப் பாதிப்புள்ளாக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. அரசியல் உறுதித்தன்மையைப் பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுடன் ஒன்றிணைந்து செயற்படத் தயார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மகாசங்கத்தினரிடம் தெரிவித்தார்.

மகாசங்கத்தினருக்கும் பிரதமர் மஹிந்தவுக்கும் இடையிலான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது, நாட்டின் நடப்பு விவகாரம் தொடர்பில் மகா சங்கத்தினரது நிலைப்பாட்டை ஓமல்பே சோபித தேரர் தெளிவுபடுத்தினார். இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பிலும் இதன்போது மகாசங்கத்தினர் தெளிவுப்படுத்தினர்.

நாட்டின் பொருளாதார நிலைமையை இயல்பான நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டுமாயின் அரசியல் உறுதித்தன்மையைப் பேணவேண்டும்.

ஆகவே, எந்தக் காரணிகளுக்காகவும் நாட்டை பாதிப்புக்குள் தள்ளமுடியாது - என்று பிரதமர் மகாசங்கத்தினரிடம் தெளிவுபடுத்தியுள்ளார். (ம)

# கடற்படையினருக்காக இன்று காணி சுவீகரிப்பு

## தடுத்து நிறுத்த அழைப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.28

ஊர்காவற்றுறை- கரம்பொன் மேற்கு ஜே/54 கிராமஅலுவலர் பிரிவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 0.4047 ஹெக்ரேயர் அளவுள்ள காணி, இலங்கைக் கடற்படையினரின் தேவைக்காக இன்று காலை 9 மணிக்கு பலாத்காரமாக அளவீடு செய்யப்படவுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அனைவரும் அணிதிரள வேண்டுமென்று தீவகம் சிவில் சமூக பொருளாளர் கருணாகரன் குணாளன் அழைப்பு விடுத்துள்ளார்.

நிலஅளவையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைவாக, ஏற்கனவே காணி சுவீகரிப்புச் சட்டத்தின்கீழ், நி அளவை செய்யப்பட்ட, உரிமையாளர் யார் என அடையாளம் காணப்படாத காணியை இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பு வலயம் அமைப்பதற்காக, அரசாங்க காணிச்சட்டத்தின்கீழ், பாதுகாப்பு அமைச்சுக்கு பாரதீனப்படுத்துவதற்காக எல்லைக் கல்லிட்டு அளவீடு செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம் என்று அரச நிலஅளவையாளர் தெரிவித்துள்ளார். (க-இ)



# ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்: சாய்ந்தமருதில் இறந்தோரின் சடலங்கள் தோண்டியெடுப்பு!

கொழும்பு, ஏப். 28

சாய்ந்தமருதில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தோரின் சடலங்களை மீண்டும் தோண்டியெடுக்கும் நடவடிக்கைகள் நீதிவான் துஷாக தர்மகீர்த்தி முன்னிலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி சஹ்ரான் தலைமையிலான தற்கொலைக் குண்டுதாரிகளால் தொடர் தாக்குதல்கள் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்டன. சஹ்ரான் ஹாஷிமின் சகோதரரான மொஹமட் ரில்வான், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி சாய்ந்தமருதுப் பகுதியில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டு உயிரிழந்தார். சிறுவர்கள் உள்ளடங்கலாக 17 பேர் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தனர்.

கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டு உயிரிழந்த மொஹமது ஹஸ்தூன் என்பவரின் மனைவியான சாரா ஜெஸ்மின் சாய்ந்தமருதில் இறந்தாரா? என்பது தொடர்பில் டி.என்.ஏ. பரிசோதனையில் உறுதி செய்யப்படவில்லை. இதனால், சாய்ந்தமருது வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடற்பாகங்களை மீளத் தோண்டியெடுத்து பரிசோதனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்தே நேற்று அந்தச் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டன. (ம)

# இடைக்கால அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## சஜித் பிரேமதாஸவிடம் தேரர்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 28

அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு வெளியில் இருந்தாவது ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென முக்கியமான தேரர்கள் சிலர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி பதவியில் கோத்தாபய ராஜபக்ச நீடிக்கும் வரை இடைக்கால அரசில் இணையத் தயாரில்லை என சஜித் பிரேமதாஸ ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். எனினும், புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் இடைக்கால அரசு அமைப்பதற்கு தெற்கு அரசியலில் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

முக்கியமான தேரர்கள் சிலர் இதன் பின்னணியில் செயற்படுகின்றனர். அவர்களே சஜித்தைச் சந்தித்து, அவரின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளனர். (ம)

### சர்வதேச நாணய நிதியத்தால்

# புதிய வரிக்கொள்கை தொடர்பில் ஆலோசனை வழங்கப்படவில்லை

கொழும்பு, ஏப். 28

புதிய வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியத்தால் ஆலோசனை வழங்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எவ்வாறான நிவாரணங்கள் கிடைக்கப்பெறும்? அவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளமைக்கமைய இலங்கை நடைமுறைப்படுத்தவுள்ள புதிய வரிக்கொள்கை யாது? என்று அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சரவைப் பேச்சாளர் நாலக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது நிதி அமைச்சரால் இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட உரை ஆற்றப்படும். சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்ததன் பின்னர், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் காணப்பட்ட நிலையைவிட பொருளாதாரத்தில் பலமிக்க நிலைமையை நாம் அடைந்துள்ளோம். மீளச் செலுத்தப்பட வேண்டிய கடன் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பதே எமது பாரதூரமான பிரச்சினையாகும். அதற்கமைய கடன் மறுசீரமைப்பு என்ற விடயத்தில் எமக்கு ஏற்கனவே கடன் வழங்கியுள்ளவர் மற்றும் எதிர்காலத்தில் வழங்கவுள்ளவர்கள் இதற்கு எவ்வாறான பிரதிபலிப்பை வழங்குவார்கள் என்ற சிக்கலும் காணப்பட்டது. நாம் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லாமல் தனித்து கடனை மீளச் செலுத்த முடியாது என்று அறிவித்திருந்தால் அதன் பின்னர் எந்தவொரு தரப்பினரும் எமக்கு உதவியளித்திருக்கமாட்டார்கள். எனினும் அதிர்ஷ்டவசமாக காலம் தாழ்த்தியேனும் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளமை எமக்கு பெரும்பலமாக அமைந்துள்ளது. எமக்குக் கைகொடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் உள்ளது என்பதை ஏனைய நாடுகள் அங்கீகரித்துள்ளன. அதற்கமைய உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்டவை எமக்கு நிவாணரங்களையும், கடனுதவிகளையும் வழங்க ஆரம்பித்துள்ளன. எனினும் வரிகளை அதிகரிக்குமாறும் அல்லது வரிக் கொள்கைகளில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் சர்வதேச நாணய நிதியம் எந்தவித ஆலோசனைகளையும் வழங்கவில்லை - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி சபாநாயகர் பதவிக்கு மும்முனைப் போட்டிக்கு வாய்ப்பு

**கொழும்பு, ஏப். 28**
**நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பதவிக்கு மும்முனைப் போட்டி நிலவக்கூடும் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.**

பிரதி சபாநாயகர் பதவியை வகித்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய கடந்த 22 ஆம் திகதியுடன் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார்.
இதுதொடர்பான கடிதம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 4 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது முதல் தேர்வாக, பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெறவேண்டும்.
ஒருவரின் பெயர் முன்மொழியப்பட்டால் ஏகமனதாகத் தெரிவு இடம்பெறும். இருவர் போட்டியிட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன்படி ஆளுங்கட்சியின் சார்பில் டிலான் பெரேராவும், 11 கட்சிகளின் சார்பில் அநுர பிரியதர்சன யாப்பாவும் பிரதி சபாநாயகர் பதவிக்குப் போட்டியிடக் கூடும். மறுபுறத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் உறுப்பினர் ஒருவரை நிறுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மும்முனைப் போட்டி நிலவும் என எதிர்வுகூறப்படுகின்றது. (ஒ-44)


## 355 ரூபாவுக்கு டொலர் விற்பனை

கொழும்பு,ஏப்.28
அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளால், அமெரிக்க டொலர் 355 ரூபாவுக்கு நேற்று விற்பனை செய்யப்பட்டது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ரூபாவின் மதிப்பு நாள்தோறும் சரிவடைந்து வருகின்றது.
அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்று 333.88 ரூபாவாகப் பதிவாகியிருந்தது என்று மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## விவசாயிகளுக்காக போராட்டம்

கிளிநொச்சி,ஏப்.28
விவசாயிகளுக்கு எரிபொருள் மற்றும் இரசாயன உரம் வழங்கப்படவேண்டும் என்று கோரி, விவசாயத் திணைக்கள அலுவலர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் இரணைமடு விவசாய விரிவாக்கல் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரசாங்கத்துக்கு எதிராக பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.
"அரச பணியாளர்களுக்குச் சம்பளத்தை உடன் வழங்கு, விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கு, விவசாயத்துக்குத் தேவையான இரசாயன உரத்தை வழங்கு, நல்லதாயிருந்த நாடு அதல பாதாளத்தில், பொதுக்கருத்துக்களை செவிமடுத்து அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பு, நாட்டைச் சீரழித்த கள்வர்களை வீட்டுக்கு அனுப்புவோம்" போன்ற பதாகைகளை ஏந்தி எதிர்ப்பை வெளியிட்டனர். (க-113)






## சர்வதேச காகங்கள் தினம் இன்றாகும்!

கம்மன்பில ருவிற்

கொழும்பு, ஏப். 28
இன்று (நேற்று) சர்வதேச காகங்கள் தினமாகும் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுத் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.
தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ள அவர், மனிதர்களால் காகங்களுக்கு ஏற்படும் துன்பகரமான யுகம் விரைவில் முடிவுபெற வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவை, காகம் என்று போராட்டக்காரர்கள் அழைப்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## அரச ஊழியர்களின் ஊதியத்தை குறைப்பதற்குத் தீர்மானமில்லை!

கொழும்பு, ஏப். 28
அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பது தொடர்பில் இதுவரையில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.
அரச நிறுவனங்களுக்கான செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சின் செயலாளரால் அறிவுறுத்தப்பட்டதால், அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைக்கத் திட்டமிடப்படுகின்றதா? என்ற சந்தேகம் எழுந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




**கை**க்கு வரமுன்னே நெய்க்கு விலை பேசக் கூடாது எண்டு பழைய ஆக்கள் அடிக்கடி சொல்லுவினம். ஆனால் அதையெல்லாம் ஆரும் கேட்டால் தானே? கெடுகுடி சொற்கேளாது கண்டியளோ. இப்பிடித்தான் நாலு மில்லியன் திட்டமும் நாசமாப் போய்ச்சுதெண்டு பிரதேச சபையள் தலையில கை வைக்குதுகள். இந்த அரசாங்கம் தன்ர பவரைக் காட்டுறதுக்காக ஒவ்வொரு வட்டாரத்துக்கும் நாலு மில்லியனை ஒதுக்கி, அந்த வட்டாரத்துக்குப் பொறுப்பான உறுப்பினர் மூலமா அந்த ஏரியாவில அவசரமா செய்யவேண்டிய வேலையளைச் செய்யிற மாதிரி ஒரு திட்டத்தைக் கொண்டந்தது.

அரசாங்கம் இந்தத் திட்டத்தை அறிவிச்ச உடனேயே கனவு பாழாப்போன கும்பல் உடனடியா -ரெடிமேட்- ஆரம்ப வைபவம் செய்யிற செட்டப்போட ஒவ்வொரு வட்டாரத்துக்கும் விசிட் அடிச்சுது. கையில காசு கிடைக்க முதலே, தங்கட ஆக்களை வைச்சு, அந்தந்த ஏரியாவில உள்ள ஒழுங்கையளை எல்லாம் திருத்தப் போறம் எண்டு, பூசையெல்லாம் வைச்சு, தங்களுக்கு தாங்களே மாலை மரியாதை செய்து , பெருமெடுப்பில ஆரம்ப நிகழ்வுகளைச் செய்தினம். அப்பிடிச் செய்ததோட போனலாவது பரவாயில்லை. திட்டம் தொடங்கிட்டு எண்டு நம்பப் பண்ணுறதுக்காக ஓரளவுக்கெண்டாலும் ஆக்கள் போய்வரக் கூடியமாதிரி இருந்த ஒழுங்கையளை எல்லாம், பெரிய ஜே.சி.பி. வாகனங்களைக் கொண்டந்து, கிண்டிக் கிளறி குதறிப் போட்டுத்தான் போயிருக்கினம். அப்பிடிக் கிண்டித்தான் கல்லுப்பரவி, பிறகு அதை மட்டப்படுத்தி , காப்பெற்றோ இல்லாட்டி தாரோ போடுவினம். அப்பிடி கல்லுப் போட்டு, தங்கட ஒழுங்கையெல்லாம் காப்பெற்றா மாறப் போகுது எண்டு ஏரியாக்காரர் எல்லாரும் கனவிலை இருந்திச்சினம்.

ஆனால் அது கனவாவே கலைஞ்சிட்டுது. காசும் வரேலை, காப்பெற்றும் போடுப்படேலை. அதைவிடப் பரிதாபம் என்னெண்டால் கிண்டுப்பட்ட ஒழுங்கையளுக்கால ஒருத்தரும் போய்வர ஏலாமல், விழுந்தெழும்பித்தான் பயணம் நடக்குது. பனையால விழுந்தவையை மாடேறி மிதிச்ச மாதிரி , இப்ப கோடை மழை கொட்டோ கொட்டெண்டு கொட்டித் தீர்க்க, கிண்டினதால வந்த பள்ளங்களுக்குள்ள கடும் வெள்ளம்.

எங்கையாவது இடக்கிடை தான் பள்ளம் இருந்திச்சு. பள்ளங்கள் எங்க இருக்கெண்டு பழகினதால, அதைவைச்சு வெட்டிக் கிட்டி போய் வந்தம். ஆனால் பாடையில போவார் இப்பிடி கையில காசு வரமுதலே ஒழுங்கையை கிண்டி விட்டதால எல்லா இடமும் பள்ளம். எல்லா இடமும் வெள்ளம். இதுக்குள்ளால போய் வாறதெண்டது கின்னஸ் சாதனைதான். இப்ப எல்லாத் திட்டங்களையும் அரசாங்கம் நிப்பாட்டிப் போட்டுதாம். அப்பிடியெண்டால் இனி காலம் முழுக்க உந்தக் கிண்டுப்பட்ட ஒழுங்கைதான் எங்களுக்கு பாதையோ? எண்டு சனங்கள் கவலையோட கேக்கினம். அவசரக் குடுக்கைத் தனமா,கையிலகாசு வரமுதலே ஒழுங்கையள், றோட்டுகளைக் கிண்டின மகாராசன்கள் சனங் கள் கேக்கிறதுக்கு பதில் சொல்லுவினமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் அஞ்சலிப்பை அரசியலாக்க முன்னணி முயற்சி

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கண்டனம்

**கொழும்பு, ஏப். 28**

**இறுதிப்போரின் போது இனப்படுகொலைக்குள்ளாக்கப்பட்ட எமது உறவுகளை நினைவுகூருவதற்கு தமிழ் மக்கள் தயாராகிவரும்போது, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அரசியலாக்குவதற்கும், தமது அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்திக்கொள்வதற்கும் சில தரப்பினர் முயற்சிப்பது அதிர்ச்சியைக் கொடுக்கின்றது என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத்தமிழரின் உறவினர் அமைப்பின் பணிப்பாளர் திருமதி கருணாவதி பத்மநாதன் தெரிவித்தார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக பொதுக்கட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதற்குள் அரசியல் ரீதியான தலையீடுகளை மேற்கொள்வதும், அதற்குப் புறம்பாக புதிய கட்டமைப்புக்களை உருவாக்குவதும் நீதிக்கான மக்களுடைய போராட்டத்துக்கு பின்னடைவைத்தான் ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நினைவுகூர்வதென்பது நீதிக்கான போராட்டமாகவும், சிங்கள பௌத்த அரசுகளின் நோக்கங்களை அம்பலப்படுத்துவதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் எதுவும் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தைக் கோருவதற்கான ஒரு தினமாகவும் அமையவேண்டும்.

தமிழர்கள் ஓர் இன அடையாளத்தைக் கொண்டவர்கள் என்பதற்காக இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர். காணாமலாக்கப்பட்டார்கள். சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இவை அனைத்தினதும் உச்சகட்டமாகத்தான் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நோக்கப்படுகின்றது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை நெருக்கடியை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் மூலம் தெளிவான சில செய்திகளை ஈழத் தமிழர்கள் சொல்லவேண்டியிருக்கின்றது. இலங்கை நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழ்த் தேசிய கட்சிகளாகவும் கூட்டுகளாகவும் முன்னணிகளாகவும் தம்மை அடையாளப்படுத்தியுள்ள வடக்கு - கிழக்கின் 13 ஆசனங்களைக் கொண்ட மூன்று அணியினரும் ஒன்றிணைந்து கடந்த வருடம் ஜனவரி மாதம் ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்தபோது, அதிலே இன அழிப்புக்கான சர்வதேசப் பொறுப்புக்கூறலையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து தரப்புகளும் கோரியிருந்தார்கள். ஆகவே, இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையை முதன்மைப்படுத்தும் அனைத்துத் தரப்புகளும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குத் தகுதிபெற்றவர்களே. இருந்தபோதும், மூன்று வேறான அணிகளாக இவர்கள் பிரிந்திருப்பதால், ஈழத்தமிழ்த்தேசியத் தரப்பாக அரசியற் கட்சிகள் நினைவேந்தலைத் தலைமையேற்று நடத்தும் தகைமையை இழந்துள்ளார்கள். இதனாலேயே, மக்கள் தளத்தில் உள்ள ஒரு பொதுக்கட்டமைப்பின் தேவை ஏற்பட்டுள்ளது.

அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு ஒன்றுள்ள நிலையில், புதிய கட்டமைப்புக்களை உருவாக்க முயற்சிப்பது எம்மை மேலும் பலவீனப்படுத்துவதற்கே உதவும். பொதுக்கட்டமைப்பில் குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அதனை ஜனநாயக முறைப்படி திருத்திக்கொள்வதே சரியானது. ஆனால், இந்தத் தினத்தை தமது குறுகிய சுயநல அரசியல் நலன்களுக்குப் பயன்படுத்தும் நோக்கத்துடன்தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் வட்டுவாகலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 13ஆவது திருத்தத்தை நிராகரிக்கின்ற சிவில் அமைப்புக்களே நினைவேந்தலை முன்னெடுக்கத் தகுதியுள்ளவர்கள் என்பதாக முன்னணியின் சார்பில் அங்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது முள்ளிவாய்க்காலில் படுகொலைக்குள்ளானவர்களை நினைவுகூருவதற்காகவும், அவர்களுக்கான சர்வதேச நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான கோரிக்கையை வலுப்படுத்துவதற்காகவும் உள்ள ஒரு தினமாகும். இதற்குள் 13ஆவது திருத்த எதிர்ப்பை மாத்திரம் ஒரு நிபந்தனையாக உட்புகுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை சுட்டிக்காட்டவிரும்புகின்றோம். தமது கட்சி அரசியலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் உட்புகுத்த முன்னணியினர் செய்யும் ஒரு கீழ்த்தரமான தந்திரமாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது -என்றுள்ளது. (ம)

## வயோதிப பெண்ணிடம் பணம், நகை கொள்ளை

வவுனியா,ஏப். 28

தனிமையில் இருந்த வயோதிபப் பெண்ணிடம் கத்தியைக் காட்டி பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டன.

இந்தச் சம்பவம் வவுனியா இறம்பைக்குளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதேவேளை, வவுனியா கோவில்குளத்திலும் பெண்ணொருவரின் சங்கிலியை அறுத்துச் சென்றனர். வவுனியா குருமண்காடு, யாழ் வீதி, இறம்பைக்குளம், கோவில்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த சில நாள்களாக இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-110)



யாழ். வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதியில் 55 ஆவது படைப்பிரிவினரால் புதிதாக அமைக்கப்பட்ட இயற்கையோடு இணைந்த மழலை பூங்கா யாழ்மாவட்ட படைமுகாம்களின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பாவால் சிறார்களிடம் கையளிக்கப்பட்டது. (ய-113)

## பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப். 28

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் 20 ஆவது பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக பிரதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-14)

## மாரடைப்பால் முதியவர் சாவு

மந்துவில் பகுதியில் மாரடைப்பால் 70 வயது முதியவர் நேற்றுமுன்தினம் சாவடைந்துள்ளார்.

முதியவருக்கு குருதிக்குழாய் அடைப்பு சத்திர சிகிச்சைக்கு அடுத்த வாரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் முதியவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது முதியவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறப்பு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். மேலும் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-14-9)

## அபிவிருத்திக்குழு பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அபிவிருத்திக்குழுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கூட்டத்துக்கு அனைத்துப் பெற்றோரையும் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திக்குழு தெரிவித்துள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்புறக்கணிப்புக்கு த.தே.கூட்டமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப்.28

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரித் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் மக்கள் போராட்டத்துக்கு ஒத்துழைப்பை வழங்கும் வகையில் இன்று மேற்கொள்ளப்படும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்கள் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளும் பணிப் புறக்கணிப்புப் பங்கு கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து தொழிற்சங்கங்களிடமும் கோரிக்கை முன்வைத்துள்ளது. (எ-இ)

## கல்லூரியில் தீ விபத்து

கொழும்பு, ஏப். 28

கொழும்பின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான மருதானை புனித ஜோசப் கல்லூரியின் கட்டடமொன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து தீயணைப்புப் பிரிவினர் தீப்பரவலை கட்டுப்படுத்துவதற்கு செயற்பட்டனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும், சம்பவத்தில் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-இ)

## மணிவிழா நிகழ்வு

நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரனுக்கான கைதடி பிரதேச மக்களால் நடத்தப்படும் மணிவிழா நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுங்கித் தோட்ட அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மதீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வேலணை - சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய ஆசிரியர் சதா சிவகுமாரன் வரவேற்புரையையும் கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு யோ.குமாரசாமிக்குருக்கள் ஆசியுரையையும் வழங்கவுள்ளனர். (ச-159)

# பிரதான 10 அத்தியாவசிய சேவைகளின் தொழிற்சங்கங்களும் இன்று போராட்டம்



கொழும்பு,ஏப்.28

**அரசாங்கத்துக்கு எதிராக இன்று முன்னெடுக்கப் படவுள்ள பெரும் போராட்டத்துக்கு, அரசாங்க கட்டமைப்பில் உள்ள 10 பிரதான அத்தியாவசிய சேவைகளின் தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.**

ராஜபக்சக்களின் மோசடியான ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் அரசியல் கட்சி பேதங்களைத் துறந்து முன்னெடுக்கப்பட்டுள்ள போரட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, இன்று நள்ளிரவு வரை 24 மணித்தியாலங்கள் அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். எமது போராட்டத்தால் ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகள் நெருக்கடிக்குள்ளாகுவார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் இருப்பினும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் வலுப்பெறவேண்டும் என்பதற்காகவே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். 30 ரயில் தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று ஒன்றிணைந்த ரயில் தொழிற்சங்கத்தின் செயலாளர் எஸ்.பி. விதானகே தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக, 17 தொழிற்சங்கத்தினரை ஒன்றிணைத்து அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்று அகில இலங்கை துறைமுக சேவை சங்கத்தின் செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்டத்துக்கு ஆதரவாக இன்று கொலன்னாவ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து, பெற்றோலிய வளங்கள் கூட்டுத்தாபனம் வரை பேரணியாகச் சென்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்படுவதுடன், அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளோம் என்று பெற்றோலிய வளங்கள் சேவை சங்கத்தின் செயலாளர் அசோக ரன்வெல தெரிவித்துள்ளார்.

மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மின்விநியோகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிக்கு அரசாங்கம் முழுமையாகப் பொறுப்பேற்று பதவி விலகுவது நாகரிகமானதாக அமையும். தொழிற்சங்கத்தினரது போராட்டத்தில் நாமும் பங்கேற்போம் என்று இலங்கை மின்சாரசபை சேவைச் சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெறும் போராட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம், ஆயினும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதில்லை என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இன்று ஒரு அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்து எதிர்வரும் மாதம் 6 ஆம் திகதி வரை பணிப்புறக்கணிப்பு இல்லாத போராட்டத்தில் ஈடுபட்டு, 6ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் கடையடைப்புப் போராட்டத்தில் இணையத் தீர்மானித்துள்ளோம் என்று ஒன்றிணைந்த அத்தியாவசிய சேவை சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க-இ)

## பட்டதாரி உத்தியோகத்தர்களும் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பு

### வடக்கிலும் ஆதரவு

நாடளாவிய ரீதியில் இன்று முன்னெடுக்கவிருக்கும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு, வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கமும், முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

கடமைக்கு வருவதற்குத் தேவையான எரிபொருளின்மை, பயணச் செலவு பலமடங்காக அதிகரித்தமை, அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவதிகரிப்பு, குழந்தைகளுக்கான பால்மா தட்டுப்பாடு மற்றும் விலையதிகரிப்பு, மருந்துகளின்மை, விலையதிகரிப்புக்கு ஈடுசெய்யக் கூடிய சம்பள அதிகரிப்பின்மை ஆகிய கோரிக்கைகள் உள்ளடங்கலாக இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளோம். அதற்கமைவாக, வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஒன்றுபட்டு சுகவீன விடுப்புடன் கூடிய ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு எமது பேராதரவை வழங்குவோம் என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## அதிபர், ஆசிரியர்கள் இன்றும் பணி விலகல்

கொழும்பு,ஏப். 28

அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனா ஆசிரியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் உருவெடுத்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளால், மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் ஜனாதிபதி உட்பட தற்போதைய முழு அரசாங்கமே பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி, நாடு முழுவதும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்க ஊழியர்களும் கடமைக்குச் சமுகம் அளித்தல், வீடு செல்லல் என போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இதற்குத் தீர்வு கோரி, கடந்த திங்கட்கிழமை அதிபர், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று நாடு தழுவிய ரீதியில் பெரும் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கு ஆதரவாக அதிபர், ஆசிரியர் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனா ஆசிரியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-159)

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

### வடக்கு அலுவலர்களும் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஏப்.28

நாடு தழுவிய ரீதியில் இன்று முன்னெடுக்கப் படவுள்ள தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சுகவீன விடுமுறையை அறிவித்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மிக நீண்டகாலமாக சம்பள உயர்வின்மை, பதவி உயர்வு, பதவி நிலை தொடர்பான முறையான நடைமுறையின்மை, சீரான கடமைப்பட்டியல் இன்மை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நாட்டில் பொருளாதாரப் பிரச்சினையாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் அநேகமானவர்கள் வெளி மாவட்டங்களுக்கு தினசரி சென்று வருகின்றனர். இதனால் போக்குவரத்துச் செலவும் அதிகரித்துள்ளது. பொருளாதார நெருக்கடிகள் குறையும் வரை வெளிக்களக் கடமைகள் மற்றும் வெளிக்கள கடமை நாள்கள் மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்னிறுத்தி சுகவீன விடுமுறைப் போராட்டத்தை இன்று முன்னெடுப்போம் என்று வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு தியாகி அறக்கொடை நிதியத்தால் உதவிகள்

கொழும்பு, ஏப். 28

யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை நிதியத்தால், பொருண்மியம் நலிவடைந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

நிறுவனத்தின் இயக்குநர் வாமதேவன் தியாகேந்திரன் ஆயிரம் ரூபா பணமும், சிறுவர்களுக்கான பொருள் களையும் வழங்கினார். கடந்த ஒரு வாரமாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிதியத்தால், கொரோனா நிதியாக அரசாங்கத் துக்கு இரண்டு கோடி ரூபா வழங்கப்பட்டதுடன், பல ருக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் ஆரியகுளம் உட்பட பல குளங்களின் புனரமைப்புக்கும், 100க்கும் மேற்பட்ட குறை வீட்டுத் திட்டங்களுக்கும் நிதியுதவிகள் வழங் கப்பட்டுள்ளன. இரண்டு வாரங்களுக்கு முதல், இரா ணுவத்தினரின் உதவியுடன் தென்னிலங்கையிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பண உதவி வழங்கப்பட்டது. (க-20)

# அங்கஜன் வெட்டிய கிடங்குகளை மூடுவது மட்டுமா எமக்கு வேலை?

## தவிசாளர் தர்ஷன் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 28


**வீதிப் புனரமைப்புகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் வெட்டிய கிடங்குகளை மூடுவது மட்டுமா எமது வேலை? என்று வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தர்ஷன் ஆதங்கம் வெளியிட்டார்.**

சபையின் மாதாந்த அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கை யில்;

யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வீதி புனரமைப்புக்கள் தொடர்பாக ஏதாவது படிவங்கள் கிடைத்தவுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜன் இராமநாதனால், வீதிக்கான அடிக்கல் நடப்பட்டுவிடும். அவரு டைய வாகனத்திலேயே அடிக்கல் நடுவதற்கான ஏற்பாடுகள் உள் ளன என்று நினைக்கின்றேன். எமது சபைக்கு அருகில் உள்ள நாகம்மாள் ஆலயத்துக்கு அருகி லுள்ள வீதிச் சீரமைப்புக்கு மேள தாளங்களுடன் அடிக்கல் நடப்பட்ட போதிலும், வீதி இன்றும் குண்டும் குழியுமாகவே உள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை யால் மேற்கொள்ளப்படுகின்ற வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு அடிக்கல் நடப்பட்டபோதிலும், இது வரை ஆரம் பிக்கப்படவில்லை இது தொடர்பில் உரிய திணைக்க ளங்களுக்கு நாம் அறிவித்திருக் கின்றோம். ஆனால் எவ்விதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப் படவில்லை. இன்று நாடு உள்ள நிலைமையில் அபிவிருத்தித் திட் டங்கள் மேற்கொள்ளப் படும் என்ற எண்ணம் எமக்கு இல்லை.

யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக வலி. தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதி களில் எந்தவிதமான கிராம மட்ட கூட்டங்களும் நடைபெறா மல், தன்னிச்சையான ரீதியிலான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன - என் றார். (க-125)




"என்.கே.ரகுநாதம்" நூல் அறிமுக விழா கடந்த 24 ஆம் திகதி சுழிபுரம் சத்தியமனை கே.ஏ.சுப் பிரமணியம் நூலகத்தில் இடம்பெற்றது. (ம-14)



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கண்டி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் சங்கைக் குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன மகாநாயக்க தேரரை நேற்றுமுன்தினம் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். (க-இ)



இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளர் ரி.மதியழகனின் இழப்பீட்டுக் கொடுப்பனவு 4 லட்சத்து 75 ஆயி ரத்து 331 ரூபா காசோலையை, நெல்லியடிக் கிளை ஆயுள் காப்புறுதி முகாமையாளர் கு.ஆறு முகன் உயிரிழந்தவரின் மனைவியிடம் அண் மையில் கையளித்தார். (ம-14)

## ஓட்டப்பந்தய வீராங்கனை மதுஷானி தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்

கொழும்பு, ஏப். 28



பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட் டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வென்ற கௌசல்யா மதுஷானி (வயது- 25) தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிரிழந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

குளியாப்பிட்டிய, தும்மலசூரிய பகுதியை சேர்ந்த இவர், சர்வதேச தடகளப் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித் துவப்படுத்தியுள்ளார். அவரது இறப்புத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம)

### விவாதப்போட்டியில்

## வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி தேசிய ரீதியில் இரண்டாம் இடம்

கொழும்பு, ஏப். 28



இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிகழ்நிலை யில் நடத் தப்பட்ட விவாதப் போட்டியில் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி தேசிய ரீதி யில் இரண்டாம் இடத் தைப் பெற்றுள்ளது.

இந்து வித்தியா விருத்திச் சங்கத் தால் நடத்தப்பட்ட போட்டியில் வட் டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாவட்டத்திலும் மாகாணத்திலும் முதலிடத்தைப்பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இந்த நிலையில் இதன் இறுதிப்போட்டி கடந்த 23ஆம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற் றது.

இறுதிப்போட்டி கொழும்பு பம்பலப் பிட்டி இந்துக் கல்லூரிக்கும் வட் டுக்கோட்டை இந்துக் கல்லூரிக் கும் இடையே இடம்பெற்றது. இதில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முதலாமிடத்தையும் வட் டுக்கோட்டை இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

போட்டியில் சி.கேசவன், ர.துலக் சன், இ.அஸ்வின், ந.பிருதிக்சா ஆகிய மாணவர்கள் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி சார்பில் கலந்துகொண்டனர். (ம-14,27)



## கல்லுண்டாய் கடற்கரையில் கண்டல் தாவரங்கள் நடுகை

யாழ்ப்பாணம், ஏப். 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல் லுண்டாய் கடற்கரையோரப் பகுதியில் கடல்சார் சுற் றுச்சூழல் அதிகார சபையால் அண்மையில் 350 கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டன.

நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யசோதா உதயகுமார், கடற்கரையோர பாதுகாப்புத் திணைக் கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர் கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண் டனர். (ம-14,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எரிகின்ற வீட்டில்...

யாழ்ப்பாணம், பொன்னாலை தெற்குப் பகுதியில், கடற்படையினருக்குக் காணி அபகரிக்கும் முயற்சியொன்று பொதுமக்களின் போராட்டத்தை அடுத்து நேற்றுமுன்தினம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதேநேரம், ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்குப் பகுதியில் இன்றையதினம் கடற்படைக்குக் காணிசுவீகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. ஆகமொத்தத்தில் தமிழர்தாயகத்தின் நிலப்பரப்புக்கள் எந்நிலை வரினும் ஆக்கிரமிக்கப்படுவது தவிர்க்க முடியாது என்ற செய்தியை இந்தக் காணி சுவீகரிப்பு முயற்சிகள் மூலம் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி நிற்கின்றது கொழும்பு.

நாடு அனுதினமும் செத்துக் கொண்டிருக்கின்றது – மக்களின் வயிற்றில் பசியைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்ற நிலையில் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற கணக்காக அமைகின்றன இந்த நில அளவைகள்.

நில அபகரிப்பைக் கைவிடுங்கள், படைக்குறைப்பை மேற்கொள்ளுங்கள் என்று தமிழர் தரப்புகள் அரசாங்கத்தைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. அண்மையில் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலும்கூட 'தமிழர் தாயகத்தில் நில அபகரிப்புத் தொடர்கின்றது' என்ற விடயம் கூட்டமைப்பால் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டது. நில அபகரிப்பு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது என்பதை புதிதாக அன்றைய தினமே கேள்விப்படுவது போன்று அப்போது வினையாற்றியிருந்தார் ஜனாதிபதி கோத்தாபய. அத்துடன், தமிழர் தாயகத்தில் இனிமேல் நில அபகரிப்பு மேற்கொள்ளப்படாது என்ற உத்தரவாதத்தையும் அவர் வழங்கியிருந்தார். இப்படியானதொரு பின்னணியில்தான் பொன்னாலை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் கடற்படைக்கென காணிகள் அபகரிக்கும் முனைப்புகள் இடம்பெறுகின்றன.

நாடு தற்போதிருக்கும் பொருளாதாரச் சிதைவு ஒவ்வொரு இலங்கைக் பிரஜையையும் வெகுவாகவே பாதித்திருக்கின்றது. அன்றாட வாழ்வைக் கொண்டு நடத்துவதற்காக ஒவ்வொருவரும்பெரும் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தமிழர் தாயகமும் இதற்கு கொஞ்சமும் விதிவிலக்கல்ல. இப்படியானதொரு நிலையில் சிங்கள பேரினவாதச் சித்தாந்தமும், தன்னால் இயன்றளவு தமிழர்களை இனியும் வதைக்கும் – வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் என்ற செய்தியை தெளிவாகவே சொல்லி நிற்கின்றன பொன்னாலை, ஊர்காவற்றுறை நிலஅபகரிப்பு முயற்சிகள்.

சீனாவினதும் இந்தியாவினதும் கடன்களால் இந்த நாடு முழுவதுமாக அமிழ்ந்து போயுள்ளது. நாடு திவாலாகும் நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படியொரு நிலையில்கூட காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்கல், இராணுவப் பிரசன்னம் என்றெண்ணும் இந்த அரசாங்கத்தின் மனோநிலையை என்னவென்று சொல்வது?

வெளிநாட்டு முதலீடுகளும், மேற்கத்தேயே உதவிகளும் தான் நாட்டை மீட்டெடுப்பதற்கான தெரிவுகளாக உள்ளன. ஆனால், அரசாங்கத்தில் நம்பிக்கை வைத்து முதலிடுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தயாரில்லை. கடனுதவிகளை வழங்குவதற்கு மேற்கத்தேய நாடுகள் விரும்பவில்லை. தமிழர் தாயகத்தை இவ்வாறான ஒருவித பதற்றத்துக்குள் வைத்திருக்க வைத்திருக்க நாட்டின் நிலைமை மேலும் மேலும் மோசமடையும். தமிழர் தாயகத்தில் ஓர் இயல்பான அமைதி என்று உருவாக்கப்படுகின்றதோ அன்றுதான் மேற்கத்தேயத்தின் நம்பிக்கையை அரசாங்கம் வென்றெடுக்கும். முதலீடுகளும் இலங்கைக்குள் ஊடுருவும். நில அளவீடுகள், இராணுவ ஆக்கிரமிப்புக்கள் என்ற பெயரில் அரசாங்கம் சவக்கிடங்குகளைத்தான் வெட்டிக்கொண்டிருக்கின்றது. அந்தச் சவக்கிடங்குகள் எமக்கானவையல்ல. இதை ஆள்வோர் புரிந்து கொள்[illegible] தைய காலகட்டத்தில் அவர்களுக்கு நன்[illegible] கூடும்.

### நாளொரு நல்வார்த்தை

"நாம் நமது எண்ணங்களின் மீது கவனம் வைக்கவேண்டும். கெட்ட எண்ணங்கள் மிகவும் ஆபத்தான திருடர்கள்" -ஸ்ரீ அன்னை



# இலங்கையில் வறுமை கோரத் தாண்டவமாடும்

## உலக வங்கி எச்சரிக்கை

THE WORLD BANK

**கொழும்பு, ஏப். 28**

**இந்த ஆண்டு அதிகளவான இலங்கையர்கள் வறுமையில் வாடுவார்கள் என உலக வங்கி எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் உலக வங்கி விடுத்துள்ள அறிவிப்பில், அதிக அளவிலான கடனை நிவர்த்தி செய்வதற்கும், நிதிப்பற்றாக்குறையைக் குறைப்பதற்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால், ஏழைகள் மற்றும் பாதிக்கப் படக்கூடியவர்களுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் அவசர கொள்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை தற்போது வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இலங்கையில் சுமார் 11.7 வீதமான மக்கள் நாளொன்றுக்கு 3.2 அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே சம்பாதிக்கின்றனர். தொற்று நோய் காரணமாக, இலங்கையின் பொருளாதாரம் 2020ஆம் ஆண்டில் 3.6 சதவீதத்தால் சுருங்கியுள்ளது - என்றுள்ளது. (ம)

# பஸில் ராஜபக்சவுடன் இரகசிய ஒப்பந்தமா?

## ஐக்கிய மக்கள் சக்தியை சாடுகின்றார் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஏப். 28

பஸில் ராஜபக்சவுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒப்பந்தம் செய்துள்ளதா? என நாங்கள் சந்தேகிக்கிறோம் என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிப்பதற்குத் தயாராகி பல வாரங்கள் கடந்துவிட்டன. இப்போது அதைச் செய்வதற்கான உற்சாகம் அவர்களிடம் இல்லை. பெரும்பான்மை மக்களின் கோரிக்கையின்படி அரசாங்கத்தை வெளியேற்றி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டதன் பின்னணியில், சில இரகசியத்தன்மை இருப்பதாக நான் உணர்கின்றேன் - என்றார்.

(ம)

நாளை 29.04.2022 வெள்ளிக்கிழமை சித்திரை 16

சுபநேரம் : 05.58 - 07.28

ராகுகாலம்: 10.28 - 11.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் பூங்கா தொடர்பில் பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 28
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பில் அண்மையில் திறக்கப்பட்ட சிறுவர் பூங்கா நடவடிக்கைகள் தொடர்பில் வலி.தென்மேற்கு பிரதேசசபையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு மாதத்தில் ஒரு நாள் வீதம் அனைத்து முன்பள்ளிகளுக்கும் விளையாட்டு சார் செயற்றிட்டங்களுக்காக சிறுவர் பூங்காவை இலவசமாக பயன்படுத்தலாம்.

சிறுவர் பூங்காவின் அனுமதிக் கட்டணமாக 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு 10 ரூபாவும் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு 20 ரூபாவும் மேலும் புகைப்படப் பிடிப்புக்களுக்கு 600 ரூபாவும் சபையால் ஏகமனதாக நிர்ணயிக்கப்பட்டது.

அத்துடன் காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணி வரையும் மாலை 3 மணி முதல் இரவு 7 மணி வரையும் சிறுவர் பூங்கா திறக்கும் நேரமும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒ-14,125)

# பொருளாதாரம் நலிவடைந்தோருக்கு தென்மராட்சி அ.கழகத்தால் உதவிகள்

சாவகச்சேரி, ஏப்.28
தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்விகற்கும் 100 மாணவர்கள் மற்றும் மிருசுவில், கொடிகாமம், மட்டுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவடைந்த 3 குடும்பங்களுக்கு தலா 30 மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை பொருளாதாரம் நலிவடைந்த மட்டுவிலைச் சேர்ந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவிக்கு சைக்கிள் ஒன்றும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு தென்மராட்சி கல்வி வலயத்துக்கு இரண்டு மடிக்கணிகளும் வழங்கப்படவுள்ளன.

(ச-9)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

**யாழ்ப்பாணம்,ஏப்.28**

**வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில், பயிற்சிகளை முடித்த படவரைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று சபையின் உப தவிசாளர் சச்சிதானந்தன் தெரிவித்தார்.**

சபையின் மாதாந்த அமர்வில், காரைநகர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் கணினித் துறையில் பயிற்சி பெற்று வெளியேறுகின்ற மாணவர்களை சபையில் பயிற்சிக்காக 6 மாதங்கள் இணைப்பது வழமையாக காணப்பட்ட நிலையில், முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பிப்பவர்களுக்கே சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

பயிற்சிக்காக விண்ணபித்தவர்கள் பயிற்சிக்காக வரவில்லை. இதுதொடர்பாக எதுவித வெற்றிடமும் சபையின் செயலாளராலும், தவிசாளராலும் சுட்டிக்காட்டப்படவில்லை.

சபையில் பயிற்சிநெறிக்காக முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இருவர் வரவில்லை. எனவே அதனை பொதுப்பட்ட ரீதியில் அறிவித்து, நேர்முகத்தேர்வு மூலம் பயிற்சிக்கு ஆள்களை இணைக்கலாம் என்று சில உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

மேலும் சில உறுப்பினர்கள் முன்னுரிமை விண்ணப்பத்துக்கே வழங்க வேண்டும் என்று வாதாடினர். 40 நிமிடங்கள் வாதப்பிரதிவாதம் இடம்பெற்ற நிலையில், சபையின் செயலாளர், கணினிப் பயிற்சி நெறியை முடித்தவர்களை விட படவரைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைப் பயிற்சிக்கு அமர்த்தினால் பிரதேச சபையின் நடவடிக்கைகளுக்கு நன்மை கிடைக்கும் என்று தனது நிலைப்பாட்டை முன்வைத்தார்.

இதனையடுத்து சபைக்குத் தலைமை தாங்கிய உபதவிசாளர் சச்சிதானந்தம், இது நல்லமுடிவு. சபையின் உறுப்பினர்கள் தங்களுடைய வட்டாரப் பகுதியில் இருக்கக்கூடிய பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு அறியப்படுத்தி அவர்களைக் குறித்த பயிற்சிக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கலாம். படவரைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்திலேயே, கணினி உள்ளகப் பயிற்சிநெறிக்கு ஆள்கள் உள்ளீர்க்கப்படுவர் - என்றார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

(க-125)

# மாடு திருடிய இருவர் கைது



யாழ்ப்பாணம், ஏப். 28
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் மேற்குப் பகுதியில் மாடு திருடிய குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 13 ஆம் திகதி வயல்வெளியில் கட்டப்பட்டிருந்த மாட்டைத் திருடி இறைச்சியாக்கினர் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய 38 மற்றும் 36 வயதான இளைஞர்கள் இருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர். மேலும் இளைஞர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஒ-14,125)

# மயங்கி விழுந்து முதியவர் சாவு!

சாவகச்சேரி, ஏப். 28
மயங்கி விழுந்த முதியவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் சாவடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் மந்துவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மந்துவில் கிழக்கு கொடிகாமத்தில் வசிக்கும் கணபதி பாஸ்கரமூர்த்தி (வயது - 66) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இறப்புவிசாரணையை பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மேற்கொண்டார். (ஒ-14,159)

# புத்தகத் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.28
சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் உலக புத்தக தினத்தை முன்னிட்டு புத்தகத் திருவிழா நாளை 29 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரையான மூன்று தினங்கள் இல. 209, பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதன்போது புத்தக விற்பனை மற்றும் கண்காட்சியுடன் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

(ச)

# ஆசிரியர்கள் கௌரவிப்பு

கொடிகாமம், ஏப்.28
தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்விப் பிரிவு தரம் 5 மாணவர்களுக்கு வலயமட்ட இணையவழி கற்றலை கொரோனா இடர் காலத்தில் மேற்கொண்ட ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடிகாமத்தில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் லோப்பையா ஸ்ரனிஸ்லாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

(ச-159)

# சிமெந்து விலை அதிகரிக்கப்பட்டதால் வாடிக்கையாளரை ஏமாற்றிய வர்த்தகர்

கிளிநொச்சி,ஏப்.28
திடீரென சிமெந்து விலை அதிகரிக்கப்பட்டதால், ஏற்கனவே சிட்டையிடப்பட்ட விலைக்கு சிமெந்து வழங்க மறுத்துள்ளார் வர்த்தகர். இந்தச் சம்பவம் கிளிநொச்சி நகரில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் நடந்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதியிலிருந்த கட்டுப்பாட்டு விலைக்கு சிமெந்து மூடைகளைப் பெற்ற வாடிக்கையாளர் ஒருவர், பற்றுச்சிட்டையை மட்டும் பெற்று, சிமெந்து மூடைகளைப் பெற்றுக் கொள்ளாமல் சென்றுள்ளார். பற்றுச்சிட்டைக்குரிய முழுப் பணத்தையும் செலுத்திய வாடிக்கையாளர், தவிர்க்க முடியாத காரணமாக வெளிமாவட்டம் சென்றுள்ளார். மீண்டும் வீடு திரும்பிய அவர், சிமெந்து மூடைகளைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த வர்த்தக நிலையத்துக்குச் சென்றுள்ளார். எனினும் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு சிமெந்து விலை அதிகரிக்கப்பட்டது. அதனால் பற்றுச்சிட்டையிலுள்ள விலைக்கு சிமெந்து மூடைகளை வழங்க வர்த்தகர் மறுத்துள்ளார். வாடிக்கையாளர் புதிய விலைக்கேனும் சிமெந்து மூடைகளை வழங்குமாறு கோரியுள்ளார். இருப்பில் உள்ள சிமெந்து மூடைகள் தமது சொந்தத் தேவைக்குரியவை என்று வர்த்தகர் மறுத்துள்ளார். அதனால் ஏமாற்றமடைந்த வாடிக்கையாளர் சிட்டைக்குரிய பணத்தை மீளப் பெற்றுச் சென்றுள்ளார்.

(க-113)

# திருவிழா தருணத்தில் இரு வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.28
ஆலய திருவிழா தருணத்தை சாதகமாக்கி, இரண்டு வீடுகளில் திருட்டு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை மூன்றாம் வேரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

வீட்டார் ஆலயத்துக்குச் சென்றமையால், ஒரு வீட்டில் 6 ஒலி அமைப்பு சாதனங்களும் இன்னொரு வீட்டில் மோட்டார் சைக்கிள் பின்புற இருக்கைக்கு கீழிருந்த ஒரு தொகை பணமும் திருடப்பட்டுள்ளன.

கிராம மக்களுக்கு தகவல் பரவியதை அடுத்து விசேட தேடுதலில், சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞர் ஒருவரை மடக்கிப் பிடித்து விசாரித்தனர். அவரிடமிருந்து ஒரு தொகை பணத்தைக் கைப்பற்றினர். அவரிடமிருந்த ஒலிச்சாதனங்களையும் கைப்பற்றினர். மேலும் இருவரை மடக்கிப் பிடித்த மூளாய் வேரம் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(க-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2030ஆம் ஆண்டுக்குள் 560 பேரழிவுகள் ஏற்படும்

## ஐ.நா. கடும் எச்சரிக்கை

**நியூயோர்க், ஏப்.28**

**தற்போது காணப்படும் பருவகால மாற்றங்கள் கவனிக் கப்படாதுவிட்டால் 2030ஆம் ஆண்டுக்குள் ஒவ்வோர் ஆண்டும் 560 என்கிற அளவில் உலக நாடுகள் பேரழிவு களை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என ஐ.நா. கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

உலகில் மனிதர்களின் செயற்பாடு களால் காபனீரொட்சைட் எனப் படும் கரியமில வாயு வெளியேற்றம் அதிகரித்துள்ளது. இதனால், பூமியின் வெப்பநிலையும் அதி கரித்துள்ளது.

பூமியின் வெப்பநிலை அதிகரிப்பது, பனிப் பாறைகள் உருகுவது போன்ற வற்றால் ஏற்படக்கூடிய பருவகால மாற்றம் பேரழி வுகளை ஏற்படுத்து கிறது என விஞ்ஞானி கள் அவ்வப்போது எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால், அதனை மனித சமூகம் கண் டும் காணாமற்போய் கொண்டிருக்கிறது. கடந்த 2018ஆம் ஆண்டில் ஐ.நா. பருவ நிலை மாற்ற அறிவியல் குழு பட்டியல் ஒன்றை வெளியிட்டது. அதில் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், வாக னங்கள் மற்றும் விவசாயம் மூலம் வெளி யாகும் பூமியை வெப்பமாக்கும் வாயுக் களை 2030 ஆம் ஆண்டுக்குள் பாதியாக குறைக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள் ளது.

2030ஆம் ஆண்டில் தீவிர வெப்ப அலைகளின் எண்ணிக்கையானது, 2001ஆம் ஆண்டில் இருந்ததுபோல் 3 மடங்கு இருக்கும். 30 சத வீதம் அதிக வறட்சி நிலையும் காணப் படும். இயற்கைப் பேரிடர்கள் மட்டு மன்றி கொரோனாப் பெருந்தொற்று, பொருளாதாரச் சரிவு மற் றும் உணவுப் பற்றாக்குறை ஆகிய அனைத்தும் இந்தப் பருவகால மாற்ற எதிரொலியாக நடைபெறும் என்று அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்தப் பேரழிவுகளைத் தடுத்து நிறுத்து வதற்கான பணியில் மக்களும் முனைப்பு காட்டவேண்டும். அவ்வாறில்லை எனில், பேரழிவுகளின் விளைவுகளை எதிர் கொள்ள முடியாத அளவுக்குச் சென்று விடும் என்று அந்த அறிக்கை மேலும் தெ ரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மரண அறிவித்தல்




## திருமதி வேலுப்பிள்ளை நாகம்மா

(ஓய்வுபெற்ற நெசவு அதிபர்)

மீசாலை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், யமுனாவீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை நாகம்மா அவர்கள் நேற்று (27.04.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சிதம்பரம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சின்னக்குட்டி வேலுப்பிள்ளையின் (பிரபல இந்திய, இலங்கை வர்த்தகர்) அன்பு மனைவியும், செல்லத்துரை, மகேஸ்வரி ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், சிவகுமார் (ஜேர்மனி), சிவறஞ்சனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம்-மன்னார்), சிவதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரான்லி லியோன்மார்க் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நீர்ப்பாசனத்திணைக்களம்-மன்னார்), கணேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், வைஸ்ணவி, விசாளன், காணவி, ஸ்ருதிக்ரோசன்மார்க், லியோன்சிமார்க், ஆன்ஜெனோசிக்காமார்க் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2022) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் 76/1 யமுனா வீதி நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

76/1 யமுனா வீதி,
நல்லூர்.

தகவல்
குடும்பத்தினர்.
077 704 1527, 077 981 7476

(CS 44365) (4/6)

# ஆங் சாங் சூச்சிக்கு 5 ஆண்டுகள் சிறை



இராணுவத்தால் ஆளப்படும் மியான்மரில் பதவிநீக்கம் செய் யப்பட்ட தலைவர் ஆங் சாங் சூச்சி ஊழல் வழக்கில் குற்ற வாளி எனக் குறிப்பிட்டு அந்த நாட்டு நீதிமன்றம் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

மியான்மரில் கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரி யில் இராணுவத்தால் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப் பட்டதிலிருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஆங் சாங் சூச்சி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். 76 வயதான நோபல் பரிசு பெற்ற ஆங் சாங் சூச்சி மீது வாக்காளர் மோசடி உள்ளிட்ட குற்றவியல் குற் றங்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மியான்மரின் மிகப்பெரிய நகரம் மற்றும் யாங்கூனின் முன்னாள் தலைவரிடமிருந்து பணம் மற்றும் தங்கக் கட்டிகள் வடிவில் 600,000 அமெரிக்க டொலர் வாங்கியதற்காக அவர் குற்ற வாளி என நேற்று இராணுவ நீதிமன்றம் தீர்ப்ப ளித்துள்ளது. (ச-இ)



# கமலா ஹாரிஸூக்கு கொரோனா

நியூயோர்க், ஏப்.28

அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸூக்கு கொரோ னாத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

அவர் தனிமைப்படுத்தப்பட் டுள்ளார் என்றும் தற்போது அவர் நலமுடன் உள்ளார் என்றும் வெள்ளைமாளிகை தெரிவித்துள்ளது. (ச-இ)

# ரூபிளில் கட்டணம் செலுத்தாமையால் எரிவாயு விநியோகத்துக்கு ரஷ்யா தடை

## இரு நாடுகள் குற்றச்சாட்டு

கீவ், ஏப்.28

போலந்து மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகள் ரஷ்யாவுக்கு ரூபிள்களில் கட்டணம் செலுத்தாமையால் இயற்கை எரிவாயு விநியோகத்தை ரஷ்யா நிறுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகி றது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்த மைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகை யில் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாமீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதற்கு எரிவாயு விற்பனைக்கு ரூபிள் மட்டுமே ஏற்கப்படும் என ரஷ்ய ஜனா திபதி புடின் அறிவிப்பு வெளியிட்டார்.

இந்த நிலையில் முதற்கட்ட நட வடிக் கையாக போலந்து, பல்கேரியா ஆகிய நாடுகள் ரூபிள்களில் கட்டணம் செலுத்த மறுத்தமையால் எரிவாயு விநியோகத்தை ரஷ்யா நிறுத்தியுள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பேச்சால் பிறரைக் கவர்வீர். சொத்துப் பிரச்சினை முடிவுக்கு வரும். நீண்ட நாளாகத் தள்ளிப்போன செயல் இன்று சாதகமாக முடியும். வெளிநாட்டுப் பயணம் குறித்து தீர்மானிப்பீர்கள்.

**இடபம்:** மற்றவர்களால் நன்மை ஏற்படும். உற்சாகமானநாள். எதிர் பார்த்து இருந்த நல்ல செய்தி இன்று வீடு தேடி வரும். விசா கிடைக்கும். கலகலப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** சிறு சிறு சங்கடங்கள் நேர்ந்தாலும் சமாளிக்கும்படி இருக் கும். பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். பணியிடத்தில் பாராட்டுப் பெறுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத நன்மை வரும். தந்தையால் மகிழ்ச்சி உண்டு. உங் களை யாரேனும் தவறு செய்யத் தூண்டினால் அதை மறுக்கவும். எங் கும் எதிலும் கவனம் தேவை.

**சிம்மம்:** வெளிநாட்டுப் பயணம் உறுதி யாகும். உங்களின் அழகு கூடும். பொழுது போக்கு விஷயங்களில் கலந்துகொள் வீர்கள். மகிழ்ச்சி கூடும். மேற்படிப்பு பற்றி தீர்மானிப்பீர்கள். சுபச்செலவு உண்டு.

**கன்னி:** பெற்றோருக்கு தொழிலில் நல்ல திருப்பம் ஏற்படும். பணியிடத்தில் பொறுப்பான பதவி உங்களைத் தேடி வரும். [illegible] செயலில் மெத்தனம் வேண்டாம்.

**துலாம்:** அறிமுகம் இல்லாத நட்பால் நன்மையும் லாபமும் ஏற்படும். நண்பரால் உங்களுக்கும், உங்களால் அவருக்கும் நலம் விளையும். இன்று மனதில் மகிழ்ச்சியும் குதூகலமும் காணப்படும்.

**விருச்சிகம்:** தந்தை வழி உறவினர் மூலம் நன்மை நிகழும் நாள். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். ஆன் மிக நாட்டம் அதிகரிக்கும். கடந்த சில நாளாக முயற்சித்து வந்த செயல் இன்று கைகூடும்.

**தனுசு:** பிறரிடம் இருந்து புதிய செயல் களைக் கற்றுக்கொள்வீர்கள். உங்களால் நன்மை அடைந்தோர் நன்றி பாராட்டுவர் புதிய வீடு வாங்குவீர்கள். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**மகரம்:** உடல் நலனில் கவனம் தேவை. தடைகளைச் சமாளிப்பீர்கள். பணியா ளர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிலும் தடை இருந்தாலும் முடிவில் வெற்றி உண்டாகும்.

**கும்பம்:** குடும்பத்தில் அமைதியைக் கையாளுவீர்கள். நிம்மதி கூடும். கலைத் துறையைச் சார்ந்தவர்களுக்குப் பெரு மையும், பாராட்டும் கிடைக்கும். நண்பர் மூலம் குடும்பத்துக்கு நன்மை ஏற்படும்.

**மீனம்:** பணியிடத்தில் ஏற்பட்ட தவறு களைச் சரிசெய்வீர்கள். தாயாரின் ஆசியைப் பெறுவீர்கள். தெய்வ பலம் கூடும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வருவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 12 . 1932

மறைவு 27 . 04 . 2022



## திருமதி பவானி சித்திரவடிவேலு

கொவியவத்தை, துன்னாலையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வதிவிடமாகவும், தற்போது புகையிரத நிலைய ஒழுங்கை சாவகச்சேரியில் வசித்தவருமான திருமதி பவானி சித்திரவடிவேலு நேற்று (27.04.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அ.சித்திரவடிவேலுவின் அன்பு மனைவியும் ஸ்ரீராம், ஸ்ரீரஞ்சன்(கனடா) காலஞ்சென்ற ஸ்ரீலதா மற்றும் ஸ்ரீபிரகாஸ் (குகன் ஸ்ரூடியோ, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரகௌரி (கனடா) சந்திரவதனா ஆகியோரின் அன்பு மாமியாரும், அசோக், சரண்யா, (கனடா) சிவதாரணி, சிவசங்கவி, ஸ்ரீறமணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல்:**
**சி. ஸ்ரீபிரகாஸ் (மகன்)**
**(குகன் ஸ்ரூடியோ சாவகச்சேரி )**
**புகையிரத நிலைய ஒழுங்கை , சாவகச்சேரி .**

(CR 8323) 1/6

# மரண அறிவித்தல்



## திரு.கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி
### (பூவிலிங்கம்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமான திரு.கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி (பூவிலிங்கம்) அவர்கள் நேற்று (27.04.2022) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும், திருமதி கலா ஸ்ரீகாந்தராஜா, திருமதி வத்சலா செல்வநாயகம் காலஞ்சென்ற சந்திரகலை சிவரஞ்சன் மற்றும் திருமதி விஜிதா சண்முகநாதன், திருமதி விமலா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 34/2 எலிஹவுஸ் றோட் கொழும்பு-15 இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (28.04.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மாதம்பிட்டி இந்து பொதுமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 8324) (4/6)

# நிகழ்வுகளிலும் ஒலிக்கும் கப்புட்டு காக்கா காக்கா

கொழும்பு, ஏப்.28

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பாடப்பட்ட "கப்புட்டு காக்கா காக்கா" என்ற பாடல் தற்போது பல்வேறு நிகழ்வுகளிலும் ஒலிக்க விடப்பட்டுள்ளது. தற்போது இளைஞர்கள் மத்தியில் பிரபலமான, போராட்டங்களிலும் அடிக்கடி ஒலிக்கவிடும் இந்தப் பாடல் திருமண வைபவங்கள் உட்பட மங்கல நிகழ்வுகளிலும் ஒலிக்க விடப்பட்டுள்ளது. அங்கு பிரபலமான அரசியல்வாதியின் பெயரும் உச்சரிக்கப்படுகின்றது. "கப்புட்டு காக்கா... காக்கா... எனப் பாடும் போது, பஸில்... பஸில்.... என்று பாடுவதையும் அவதானிக்க முடிகின்றது. (க-இ)

# அஞ்சலிக் கூட்டம்

மறைந்த தகைசார் பேராசிரியர்

**திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன்**

அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அஞ்சலிக்கூட்டம் இரசாயனவியல் துறை, யாழ். பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திகதி | : | நாளை (29.04.2022) வெள்ளிக்கிழமை |
| நேரம் | : | பிற்பகல் 3.30 மணி |
| இடம் | : | இரசாயனயவில் துறை விரிவுரை மண்டபம் விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம். |

மறைந்த பேராசிரியருடன் அன்பு கொண்ட அனைவரையும் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இந் நிகழ்வினை **Zoom** இல் நிகழ்நிலையாக பார்வையிடலாம்.

**Meeting Id - 624 728 57975**
**Password - CM29@chem**

**இரசாயனவியல் துறை**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(cs.44362) (2.6)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 30.07.1940

இறப்பு 27.04.2022



முன்னாள் நூலகர்

## திருமதி ரோகினி பரராஜசிங்கம்

B.Sc (Madras), MLIS (Madras), FLLA (Srilanka)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் நூலகர் திருமதி ரோகினி பரராஜசிங்கம் அவர்கள் 27.04.2022 இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நூலக சமூகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(cs.44364) (2.6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 12 . 1967

மறைவு 23 . 04 . 2022



சொர்ண சித்தி விநாயகர் அடியில்

## சிவசுப்பிரமணியம் கிருஸ்ணகுமார்

கொக்குவில் மேற்கு சொர்ண வடலியைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் கடந்த 23.04.2022 அன்று நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அ.சிவசுப்பிரமணியம் (வீரன்) - இராஜேஸ்வரி தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், நந்தகுமார் (ஜேர்மன்), ரஞ்சினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அச்சுவேலியை சேர்ந்த துவாரகாதேவி (செல்வி) அவர்களின் அன்புக் கணவரும், வித்தியாவின் பாசமிகு தந்தையும், ஜெயமஞ்சுளா, பிரேம்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.04.2022) வியாழக்கிழமை நெதர்லாந்து நேரப்படி பிற்பகல் 1.30 - 4.30 தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மாமனார்**
**செ.லோகேஸ்வரன்**

(cs.44352) (2.6)

# பதவி விலக தயார்!

கொழும்பு, ஏப். 28

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு இடமளித்து பதவி விலகத் தயார் என ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்களால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

முழு அரசாங்கமும் இராஜினாமா செய்ய வேண்டும் என்ற பொதுவான நிலைப்பாடு உருவாகியுள்ளது. இதனால் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் பதவி விலகத் தயாராக உள்ளனர். சமூகக் கருத்துக்குப் புறம்பாக அரசாங்கத்தை வலிந்து பாதுகாக்க முயற்சிப்பதில் அர்த்தமில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்த வேலைகள் ஸ்தம்பித்தால் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு

## தேசிய நிர்மாணச் சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஏப்.28**

**நாளாந்தம் ஏற்படுகின்ற அபரிமிதமான விலையேற்றத்தால்,ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்குச் சாத்தியமான தீர்வுகள் எவையும் எட்டப்படாமையால், ஒப்பந்த வேலைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியாது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பு உட்பட பல எதிர்மறை விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று இலங்கை தேசிய நிர்மாணச் சங்கத்தின் வடமாகாணக் கிளையினர் சுட்டிக்காட்டினர்.**

வடக்கு மாகாண ஒப்பந்தகாரர்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் நெருக்கடிகள் மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பாக, வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உயர்நிலை அதிகாரிகளுடனான கலந்துரையாடல் கைதடியிலுள்ள பிரதம செயலாளர் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் ஒப்பந்தகாரர்களால் முன்னெடுக்கப்படும் அரசாங்க நிர்மாண வேலை முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

ஒப்பந்த வேலைகளிலுள்ள பல்வேறு சமகால பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பில் சங்கத்தினரால் எடுத்துரைக்கப்பட்டன.

சாத்தியமான வழிவகைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் முன்மொழியப்பட்டன. அத்துடன் ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றி, உரிய வேலைகளுக்கான விடுவிக்கப்படாதுள்ள நிதியை விடுவிப்பதற்கான துரித நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் சங்கத்தினரால் வலியுறுத்தப்பட்டது.

(சு-இ)

# கட்டடத்திலிருந்து தவறிவீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.28

வெள்ளவத்தை, டப்ளியூ.ஏ.சில்வா மாவத்தை பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடம் ஒன்றில் தொழில்புரிந்து வந்த ஊழியர் ஒருவர் நேற்று கட்டடத்திலிருந்து தவறி கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கட்டடத்தின் மூன்றாவது மாடியில் மின்தூக்கிக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியிலேயே 47 வயதான குறித்த ஊழியர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச-இ)


## அறிவித்தல்

அம்பலவாணர் வீதி, கற்பகுனை, உடுவில், சுன்னாகம் சுப்பிரமணியம் கைம்பெண் கனகமணி ஆகியவருக்குச் சொந்தமாக இருப்பதும் உடுவில் இறையில் அமைந்துள்ளதுமான "ஆண்டியவோடை." என்ற ஆதனத்தை 20, Henwood Crescent, Pembury TN 24L, Royal Tunbridge Wells, Kent, England என்ற முகவரியில் வசிக்கும் பிரபாகரன் ரவி மற்றும் பெண் ஜெயகௌரி ஆகியோர் அறுதி விற்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனால் குறித்த ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சிப்பவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு குறித்த சுப்பிரமணியம் கைம்பெண் கனகமணி என்பவரின் அற்றோனித் தத்துவகாரனான கிளானை, கொல்லன் கலட்டி, தெல்லிப்பளையைச் சேர்ந்த தில்லைநாயகம் தாமரைமணாளன் ஆகிய நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சுப்பிரமணியம் கைம்பெண் கனகமணி - 00447448183622
தில்லைநாயகம் தாமரைமணாளன் - 0094776092339


# விழிப்புணர்வு

சாவகச்சேரி, ஏப். 28

"எழில்மிகு கிராமம்", "வளம்மிக்க வாழ்வு" என்ற கருப்பொருளிலான விழிப்புணர்வு நேற்று நாவற்குழியில் இடம் பெற்றது.

வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-9)



# வீட்டுத் தோட்டச் செய்கைக்காக மரக்கறி நாற்றுக்கள் விநியோகம்

வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்க, பயன்தரு மரக்கறி நாற்றுக்கள் மற்றும் விதைகள் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் முன்றிலில் நேற்று விநியோகிக்கப்பட்டன.

காரைநகர்- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சென்ற பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இவை விநியோகிக்கப்பட்டன.

வலி.மேற்குப் பிரதேசசபையின் உப தவிசாளர் சச்சிதானந்தம், வலி.மேற்குப் பிரதேசசபை உறுப்பினர்களான பொன்ராசா, உமாபதி, ஜெயந்தன், இதயகுமாரன், சுபாஜினி, சுதர்சினி, நின்மதி, பரமசிவம்பிள்ளை, குணஶ்ரீ, மதனகோபால கிருஷ்ணன் ஆகியோர் நாற்றுக்களை விநியோகித்தனர்.

(க-125)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியரும், முன்னாள் உப அதிபருமாகிய

திருமதி **வசந்தா சத்தியபாலன்**

அவர்கள் நேற்று (27.04.2022) புதன்கிழமை காலமானார். அன்னார் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(cs19522) (2.6)

பிறப்பு: 24.10.1964
இறப்பு: 27.04.2022

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி.


# வலைப்பந்தாட்டத் தொடர் மதியொளி சம்பியனானது!



சாவகச்சேரி, ஏப். 28

தென்மராட்சி பிரதேச வலைப் பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் வரணி மதியொளி விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வரணி மதியொளி அணியும் வரணி இளைஞர் கழக அணியும் களமிறங்கின. 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மதியொளி அணி கிண்ணம் வென்றது.

(ம-9)


## 1ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
21 . 03 . 1934

மறைவு
09 . 05 . 2021

அமரர் விஸ்வலிங்கம் சிவஞானம்

முன்னாள் இ.போ.ச.சாரதி
(திதி:28.04.2022 வியாழக்கிழமை)

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்
ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்"

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

வாசிகசாலையடி, உடுப்பிட்டி. குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியரான

**திரு. சி.ஆறுமுகதாசன்**

அவர்களின் அன்புச் சகோதரி

**செல்வி சி.ஜசோதாம்பிகா**

அவர்கள் கடந்த 24.04.2022 இறை-பதமடைந்தார். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்-கின்றோம். (CS 19514) (4/6)

தோற்றம் 16.10.1972 மறைவு 24.04.2022

நலன்புரிச் சங்கம்,
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்.

# இலங்கை வங்கி

பின்வரும் வங்கிக் கிளையை ஆரம்பிப்பதற்கு குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடம் தேவைப்படுகின்றது
வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கிக் கிளை காங்கேசன்துறை

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- ஆகக்குறைந்தது 900 சதுர அடி இட அளவினைக் கொண்டிருப்பதுடன் கீழ்த் தளமாகவும் இருத்தல் வேண்டும். (பகுதிகளாக பிரிக்கப்படாது இருத்தல் வேண்டும்.)
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 30 அடிக்கு மேற்பட்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவு இடவசதி காணப்படல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் விநியோக வசதி, இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி சேவை மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2'x2')
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு (ஜெனரேட்டர்) 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்தின் பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்பு கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளோர் கட்டட வரைபட பிரதிகள் மற்றும் சகல சான்றிதழ்களுடன் 14 நாட்களுக்குள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையில் இடது மேல் மூலையில் **"வரையறுக்கப்பட்ட காங்கேசன்துறை வங்கிக் கிளைக்குப் பொருத்தமான கட்டடம்"** எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (வடபிராந்தியம்),
இலங்கை வங்கி,
வடபிராந்தியக் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3985/3126

இலங்கை வங்கி BOC

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 10 . 1964



மறைவு 27 . 04 . 2022

## திருமதி வசந்தா சத்தியபாலன்

**(யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற உப அதிபர்)**

இல.882, பருத்தித்துறை வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா சத்தியபாலன் அவர்கள் நேற்று (27.04.2022) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராஜா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், திரு.சத்தியபாலன் (ஓய்வுநிலை உப அதிபர், யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், சௌஜன்யன் (மென்பொருள் பொறியியலாளர்), ஷாகரி (SLLA மாணவி, நூலகமும் தகவல் விஞ்ஞானமும்) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.மாதங்கி(யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) யின் அன்பு மாமியாரும், ஜெயந்தி (ஆசிரியை, யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜெயராணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரவீந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான பவானி, சீதா மற்றும் சத்தியமூர்த்தி (வைத்தியர்), சத்தியநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தியாகராஜா, சிவபாதம், ரூபராணி, சாந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், வத்சலா (லண்டன்), வனிதா (லண்டன்), வாசுகி (கனடா), நிசங்கன் (விரிவுரையாளர், உயர் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும், Dr. சத்தியரூபன் (கொழும்பு தேசிய வைத்தியசாலை), சாருஜன் (விரிவுரையாளர், விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சித்தியும், ஜெனிஷன் (Automation Technician, Switzerland), மிருதுளா (Dentist, Switzerland), நிஷாதரி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆகியோரின் பெரியம்மாவும், சஜிக்காவின் (Prophylaxis Assistant, Switzerland) மாமியும், டியாராவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 0072 153 (கணவர்)**
**077 5333 884 (மகன்)**
**0041798833312 (சகோதரி)**
**இல.882, பருத்தித்துறை வீதி, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.** (CS 19529) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 08 - 1947



மறைவு 27 - 04 - 2022

## திருமதி ஐயாத்துரை யோகராணி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை யோகராணி நேற்று (27.04.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசு சின்னதங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஐயாத்துரையின் பாசமிகு மனைவியும், பிரமிலா (ஜேர்மனி), சிவகரன் (ராசன்), தயாகரன் (ஜெயா), சுபாஸ்கரன், சுஜாத்தா (செல்வி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தராஜா (வேந்தன்-ஜேர்மனி), நிமாலினி, யசிகலா, சத்தியதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தனா, கார்த்திக், சாதுரியன், சாகித்தியா, சந்துஜன், நிலவினியன், குதூகலப்பிரியன், குகஜினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், தியாகராஜா, துரைராஜா மற்றும் லலிதாராணி, லோகராணி, ஜெயராணி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.74/4, மலர்மகள் வீதி, அரியாலையில் அமைந்திருக்கும் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் (ராசன் வெல்டிங்):- 077 714 8083
மகன் (ஜெயா):- 077 796 9554
(CS 19525) (4/6)
தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 09 . 1944



மறைவு 27 . 04 . 2022

## இராசலிங்கம் அருளம்மா (பேபி)

புகையிரதநிலைய வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் அருளம்மா (பேபி) அவர்கள் நேற்று (27.04.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைராசா சறோஜினிதேவி (குண்டு), குமாரசாமி ஜீவரேகா (ஜீவா), பொன்னையா பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) மற்றும் ஐயாத்துரை சிவபாக்கியதேவி (தேவி), சற்குணம் (குஞ்சு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஸ்பலதா (ஜேர்மனி), சரவணபவன் (சுவிஸ்), இராஜேஸ்வரி, மதுசுதன் (நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்), கிருசாந்தன் (துபாய்) ஆகியோரின் அன்பு தாயாரும், காண்டீபன், ரதி (சுவிஸ்), அபிவர்சாயினி, தனுஜா, சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2022) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்.

**077 907 3773, 077 163 7861** (CS) 1/4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 01 . 1949



மறைவு 27 . 04 . 2022

## திருமதி முருகேசபிள்ளை ஞானேஸ்வரி

சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகேசபிள்ளை ஞானேஸ்வரி நேற்று (27.04.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், திரு. சுப்பிரமணியம் முருகேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தவமணி, துரைசிங்கம் மற்றும் சத்தியவதனா (ஆசிரியர் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், கோபிநாத் (மேற்பார்வையாளர் - சிவில், யாழ்ப்பாண பல்கலைக் கழகம்), பிரஜீனா (பிரான்ஸ்), சுதாகர், (பொறியியலாளர் - MG Consultant, RDA) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சர்மிளா (Proprietor Happy Retirement Care Center), தனேஸ்வரன் (பிரான்ஸ்), துளசியா (பற்சிகிச்சையாளர் MOH Office - சாவகச்சேரி) ஆகியோரின் மாமியாரும், வாகீசன், கேதீசன், றதீசன், சுபீசன், நவநீதா, மதுரங்கன் ஆகியோரின் பெரியம்மாவும், சுபஸ்திகா, தீபன், அகீபன், மயூரன் ஆகியோரின் மாமியும், திரு. திருமதி சுந்தரகுமார் - மல்லிகாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற சு.கமலேஸ் வரி, சு.மங்களேஸ்வரி ஆகியோரின் மச்சாளும், தக்ஷிகா, யஸ்மிதா, அத்திகை, தருண், அதிதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2022) வியாழக்கிழமை மீசாலை வடக்கு, மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 285 0826
077 956 2163

(cs 19519) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 11 1942



மறைவு 26 04 2022

## திருமதி. அக்னஸ் அம்மா சாம்பசிவம்

முன்னாள் இலிகிதர் யாழ். கச்சேரி, ஆசிரியை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, பிரதி அதிபர் கொழும்பு பம்பலப்பிட்டி சென்.மேரிஸ் மகாவித்தியாலயம்.

யாழ்ப்பாணம் பேக்கரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வத்தளை, ஹெந்தலை, தயா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. அக்னஸ் அம்மா சாம்பசிவம் இயற்கை எய்தினார்.

இவர் க.சாம்பசிவம் (முன்னாள் விரிவுரையாளர், கல்வி முகாமைத்துவம், தேசிய கல்வி நிறுவகம்) அவர்களின் அன்பு மனைவியும், நொயல் இந்திரன் (ஜேர்மனி) அவர்களின் அன்புத் தாயாரும், தவமாலினி (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமியாரும், காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை செபமாலை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, லட்சுமி (துன்னாலை) ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற தவராசா, நீற்றா (திருகோணமலை) ஆகியோரின் சம்பந்தியும், காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா, அடைக்கலம், திரேசம்மா, மரியம்மா மற்றும் தேவராசா, இரத்தினசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இன்பராணி, ஈவா (லண்டன்), காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, வின்சன்ட், சுப்பிரமணியம், இந்திரா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் 28/04/2022 வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் வத்தளை, மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு கெரவலப்பிட்டிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: க.சாம்பசிவம் (கணவர்) 074 1953160
நொயல் இந்திரன் (மகன்) 075 9303172 / தவமாலினி (மருமகள்) 075 6602728

# பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
## பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

செல்லத்துரை ஜெயதாசன்.
இணுவில் வீதி.
மானிப்பாய்

வழ. இல:MB/19364/18 — வழக்காளி
வகை: ஈட்டுமுறி
பெறுமதி: ரூ.3, 410, 000/= — எதிர்

1. சந்திரசேகரம் மோகனச் சந்திரன்
2. பெண் தேவசேனா

இருவரும்
லக்சபானா வீதி.
மகாறம்பைக்குளம்.
வவுனியா.

எதிராளி

2021ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய திருமதி. ஆ. நந்தினிதேவி ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்மைவாகவும் எனக்களிக்கப்பட்ட இவ்விற்பனை அதிகாரத்திற் கமைவாகவும் இவ்விற்பனையை நடத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த உடுப்பிட்டி கிராமத்திலுள்ள "சுடுகாட்டு விளாம்புலோ" நிலப்பரப்பு 05 குளி 01.84 ஆதனத்தில் நின்று 2022ம் ஆண்டு வைகாசி மாதம் 31 ஆந் திகதி மு.ப 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

### தீர்வைத்தொகை

முப்பத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்தை (3,410,000/=) இன்னும் குறித்த முதல் ரூபா பதினொரு இலட்சத்திற்கும் (1,100, 000/=) வழக்குத் தொடர்ந்த திகதி முதல் வழக்குத் தீர்வைத் திகதி வரைக்கும் வருடம் ஒன்றிற்கு நூற்றிற்கு அறுபது (60%) வீத வட்டியையும் அதன் பின்னர் கட்டப்பெற்ற முழுத்தொகைக்கும் முழுக்கடனையும் இறுக்கும் வரை சட்ட வட்டியையும் செலவையும் செலுத்த வேண்டும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம். யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பகுதி. வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவு வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை. உடுப்பிட்டி தெற்கு கிராம சேவையாளர் பிரிவு J/354. உடுப்பிட்டி கோவிற்பற்று உடுப்பிட்டி இறை:

அ) "சுடுகாட்டு விளாம்புலோ " நிலப்பரப்பு 06 குளி 15.32 (இதன் பதிவு: B10/107)

ஆ) "சுடுகாட்டு விளாம்புலோ " சொரியலாக இருந்து வந்து தற்போது இதனோடிணைந்துள்ளதான நிலப்பரப்பு 7 குளி 10 1/2யில் 2/3 பங்கில் அரைவாசியானது சொரியலாக 1/3 இது நிலப்பரப்பு 2 குளி 9.5. (இதன் பதிவு B 10/108)

இ) "சுடுகாட்டு விளாம்புலோ" நிலப்பரப்பு 09இல் 1/3 பங்கான நிலப்பரப்பு 03(இதன் பதிவு: B10 / 109

ஈ) "சுடுகாட்டு விளாம்புலோ " நிலப்பரப்பு 14 5/8இல் சொரியலாய் 1/6 பங்கான நிலப்பரப்பு 2 குளி 7.74 (இதன் பதிவு: B10/110)

மேற்படி நான்கு ஆதனங்களும் ஒன்றாகக் கூட்டியது "சுடுகாட்டு விளாம்புலோ" நிலப்பரப்பு 14 குளி 14.56 ஆகும். இதில் நன்கொடையளிக்கப்பட்ட நிலப்பரப்பு 05 குளி 10.63 (இதன் பதிவு: B 25/35) ஐயும் ஈடுவைக்கப்பட்டதான நிலப்பரப்பு 4 குளி 2.09 (இதன் பதிவு B 35/36) ஐயும் நீக்கி மிகுதி நிலப்பரப்பு ஐந்து குளி ஒன்று தசம் எட்டு நான்கும் (நிலப்பரப்பு 05 குளி 1.84) வீடும், கிணறும். இந்த நிலப்பரப்பு 05 குளி 1. 84 ற்கும் எல்லைகள்:

**இதன் எல்லைகள் :**

**கிழக்கு** - ஒழுங்கை
**வடக்கு** - குமாரசாமி வேலுப்பிள்ளையின் ஆதனம்
**மேற்கு** - குமாரசாமி வேலுப்பிள்ளையின் ஆதனமும். அதிமாறன் பெண் கிரிசாந்தியின் ஆதனமும்.
**தெற்கு** - ஒழுங்கை

இதடாங்கலும்

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4 ) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) 1%
பிஸ்கால், எழுதுனர், கூவுநர் செலவு சிவில் நடைமுறைக்கோவையின் படி விளம்பரச் செலவுகளும். பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்துச் செலவுகள்
விற்பனை கமிசன் சிவில் நடைமுறைக்கோவையின் படி
விற்பனை ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

நீதிமன்றக் கட்டளைப்படி
2022ம் ஆண்டு சித்திரை மாதம் 18ம் திகதி

பதிவாளர் பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

(cs 44225) (2.6)

# ஆசிரியர்கள் தேவை

தனியார் பாலர் பாடசாலைக்கு யாழ்ப்பாணம், நல்லூர், நெல்லியடி, மானிப்பாய் ஆகிய இடங்களில் கடமையாற்றக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

(CS 19526) (4/5)

**077 468 2951, 077 408 3656**

# தேவை

பில்கிளாக், பொதியிடல், உதவியாளர், பயிலுனர், அனுபவம் உள்ளவர் (1500/=) என்பவற்றுக்கு ஆண், பெண் ஊழியர்கள் தேவை. **பிருந்தா மில், 179 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** Tele:077 174 6101

## இலங்கையை...

காங்கிரஸ் உறுப்பினர் ஸ்டீவன் கோர்ஸ் போர்ட் தெரிவித்துள்ளார். அண்மையில் நடந்த இலங்கையர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சி உறுப்பினராவார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடி மற்றும் வங்குரோத்து நிலைமை தொடர்பாக தான் அறிந்து கொண்டுள்ளேன் என்று தெரிவித்துள்ள அவர், தனியொரு குடும்பமே அதற்கு காரணம் என அறிந்துள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையின் சொத்துக்களை அபகரித்ததன் மூலம் தற்போதைய நிலை உருவாவதற்கு யார் காரணம் என்பது தொடர்பாக காங்கிரஸ் விசாரணைகளுக்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவ்வாறான விசாரணைகளை அமெரிக்காவின் நியாயாதிக்க எல்லைக்குள் முன்னெடுக்க முடியும்.

அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் வெளிவிவகார குழுவுக்கு தலைமை தாங்கும் கிரகரி மீக்ஸ் உடன் இணைந்து விசாரணைகளுக்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளேன். இலங்கையின் சொத்துக்களை அபகரித்த இலங்கை அரசாங்கத்தின் ஒரு பகுதியாக விளங்கும் அமெரிக்க பிரஜைகள் தொடர்பாக காங்கிரஸ் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது - என்றார். (அ-எ-இ)

## ஏ.ரீ.எம். தடை...

பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி நிறுத்தப்பட்டுள்ளதால் வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

வெளிநாடுகளுக்குப் பயணமாகும் இலங்கையர்கள்(குறிப்பாக மாணவர்கள்), இலங்கையில் உள்ள தங்களின் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை, வங்கி அட்டைகளைப் பயன்படுத்திப் பெறும் வசதி இதுவரை செயற்பாட்டில் இருந்தது.

நாடு தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், அந்த வசதி எந்த வித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள, கற்றல் நடவடிக்கைகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் தற்போது பணத்தைப் பெற முடியாது பெரும் இக்கட்டான நிலைமையில் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-எ-இ)

## போக்குவரத்து...

போதும் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் வழமைபோன்று நடைபெறும் என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வழமை போன்று தொடர தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், இன்று பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
27
•
02
•
1940



ஆண்டவன் அடியில்
09
•
05
•
2021

யாழ். வடமராட்சி வதிரி ஞானியார் வளவைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் தையல்நாயகி கந்தையா

திதி: 28-04-2022

அம்மா!

ஆண்டொன்று ஆனதம்மா இன்று!
ஈன்றெம்மைப் பெற்றவளே!
உனை இழந்து! உமைப் பிரிந்தோம்!
பல நாள் ஊணுறக்கம் மறந்தோம்!
அன்பு பாசம் நேசம் பொழிந்து
எங்களை கட்டி அணைத்தாயே! வாழ வழிகாட்டி வையமெலாம்
புகழ வைத்த தெய்வமே! அன்பால்
என்றும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு...
காலம் கடந்தும் வாழ்வோம்
உங்கள் ஞாபகங்களுடன்....தெய்வமாய் வணங்குவோம் வாழ்வுள்ள நாள்வரை...


சந்திரனில்லா வானம் தாமரை இல்லாப் பொய்கை மந்திரி இல்லா வேந்தன் மதகரி இல்லா
சேனை போல......இந்திரகிரியும் இன்றெம்மோடு இந்நிலைக்காளானதே உங்களை
இழந்ததாலே இனியென்ன செய்வோம் நாமே

சந்ததமும் உம் நினைவு சாகாத நம் நினைவே...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..

இந்திரகிரி, ஞானியார் வளவு, வதிரி (cr.37894) (2.6) குடும்பத்தினர்

## ஆறாத்துயரில் ஆண்டுகள் பதினைந்து.......

அன்னை மடியில்
20
•
08
•
1985



ஆண்டவன் அடியில்
28
•
04
•
2007

### உருத்திரமூர்த்தி ஆதவன் (ஊவா)

எங்கள் அன்பு மகனே
முன்னூறு நாட்கள் சுமந்து
இருபத்து இரண்டு வருடங்கள் வளர்த்து
பதினைந்து ஆண்டுகள் ஈரவிழிகளுடன்
உனை இழந்து வாடுகின்றோம் ஆதவா
எல்லாம் இருந்தும் ஏதோ ஒரு சோகம்
எங்கள் மனதை வாட்டி வதைக்கின்றது ஆதவா

சாவெனும் வடிவம் கொண்டு சடுதியில் காலன் வந்து - தாவென
உந்தன் உயிரை தட்டிப் பறித்துச் சென்றானோ!
நீ எண்ணிய எண்ணமெல்லாம்
மண்ணாகிப் போனதோ!
நீ எட்டாத தூரம் சென்று பதினைந்து
ஆண்டுகள் ஆனதோ!

எம் உயிர் உள்ளவரை நீங்காது
உன் நினைவு....................

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா,
தங்கை குடும்பத்தினர்

சிவன் வீதி,
உரும்பிராய்.
(cs 19331) (7.6)

# மரண அறிவித்தல்



## திருமதி அருளப்பு மலர்மணி

மலர்வு
08.12.1942

உதிர்வு
25.04.2022

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளப்பு மலர்மணி கடந்த (25.04.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிமியோன் - கிறிஸ்ரீனா தம்பதியரின் அன்பு மருமகளும், முன்னாள் கட்டட ஒப்பந்தகாரர் அருளப்புவின் அன்பு மனைவியும், கமலமணி, காலஞ்சென்ற துரைமணி மற்றும் தங்கராசா, அசோக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் ஞானம்மா, செல்லக்கிளி, ராணி, சூசைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெனோவா, அழகுராசா (சிறில்-டென்மார்க்), வனிதா, றொபின்கூட் (பிரான்ஸ்), டெலன்ஸ் (ஜேர்மன்), யசி, ஜெஸ்மன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அந்தோனிப்பிள்ளை, கிளிவ்வா (டென்மார்க்), உதயசிங்கம் (ராசா), சயிலா (பிரான்ஸ்), சண்சியா (ஜேர்மன்), நிக்ஷன், கினித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியதர்சினி, அஸ்மன், டொமாண்டோ), துசி (யுடிற்றா - டென்மார்க்), டினிஷா (டென்மார்க்), டயானி (ஜேர்மன்), சுதர்சன் (பிரான்ஸ்), சுதர்சினி, ஜான்சன், றொகான் (பிரான்ஸ்), டிலைக்ஷனா (பிரான்ஸ்), அபிடன் (பிரான்ஸ்), டெனோஜினி (ஜேர்மன்), டெனிசியா (ஜேர்மன்), டியா (ஜேர்மன்), ஸ்ரெபான் (பிரான்ஸ்), சயிந்தா, அபிசை (பிரான்ஸ்), ஆரோன் (பிரான்ஸ்), ஐஸ்வரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறை ஏ.வீ. வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (28.04.2022) வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.

(CS 19523) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 355 பேருக்கு...

நாளை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

ஆசிரிய மாணவர்கள் 355 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துல கலந்துகொள்ளவுள்ளார். (அ-எ-இ)

## ரயில்வே,...

தும் நோக்கில் நேற்று நள்ளிரவு முதல் அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இந்த அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று நள்ளிரவுவரை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில், நேற்று நள்ளிரவு முதல் அடுத்துவரும் 24 மணித்தியாலங்களுக்கு நாட்டில் தபால் சேவைகள் எவையும் இயங்காது என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## இன்று...

அரசதுறை, அரச சார்பற்ற தனியார் துறை, பெருந்தோட்டத்துறை உட்பட பல்வேறு துறையினர் இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று தொழிற்சங்கங்களின் இணைப்பு அலுவலகத்தின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள், மின்சார சபை தொழிற்சங்கங்கள், சுகாதார தொழிற்சங்கங்கள், துறைமுக ஊழியர்சார் தொழிற்சங்கங்கள், தபால் துறைசார் தொழிற்சங்கங்கள், பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள தொழிற்சங்கங்கள், வங்கிசார் தொழிற்சங்கங்கள் உட்பட மேலும் பல தொழிற்சங்கங்கள் பணி புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

அதேநேரம், அதிபர்கள் ஆசிரியர்கள் நாளை மீண்டும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார். அதிபர், ஆசிரியர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனா ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கெடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின், மக்களின் வாழ்வுரிமையைக்கூட அரசாங்கம் வழங்கவில்லை. மாணவர்களுக்கு உணவு கூடக் கிடைக்காத சூழ்நிலையில்தான் அரசாங்கத்துக்கு எதிராகப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று கூறினார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மற்றும் பல வங்கித் தொழிற்சங்கங்களும் இன்றைய பணிப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அதனால் இன்று நாடு முழுவதும் உள்ள பொது மற்றும் தனியார் வங்கிகள் பல இயங்காது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கையில் கிழக்குப் பல்கலைக்கழகமும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் இணைந்து கொண்டுள்ளன என்று தெரியவருகின்றது.

இன்று முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு நூற்றுக்கணக்கான தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன என்று தொழிற்சங்கங்களின் இணைப்பு அலுவலகத்தின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாட்டு மக்களின் குரலை செவிமடுக்காத அரசாங்கம் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றது. அரசாங்கத்தின் இந்தப் போக்கைக் கண்டித்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவித்த அவர், எதிர்வரும் 6ஆம் திகதி நாடுமுழுதும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (அ-எ-இ)

## நாட்டை....

கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:-

நாளை (இன்று) நடைபெறவுள்ள பணிப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கும், எதிர்வரும் 6ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

நாட்டின் இன்றைய நிலைமைக்குக் காரணமானவர்கள் பதவி விலக வேண்டும் என்பதே நாட்டிலுள்ள பெரும்பான்மையானோரின் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை ஏற்று அரசாங்கம் பதவி விலக வேண்டும்.

இதை வலியுறுத்தி நாளை (இன்று) பணிப் புறக்கணிப்பில் ஈடுபட நாட்டில் உள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களும் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இந்த அழைப்பை விடுக்கின்றது. எதிர்வரும் 6ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் பொது ஹர்த்தாலுக்கும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இந்த இரண்டு நாள்களும் அதிபர்கள், ஆசிரியர்கள் கடமைக்குச் செல்லாது அதிபர்கள் கல்வித் திணைக்களத்துக்கும், ஆசிரியர்கள் அதிபர்களுக்கும் தமது விடுமுறையை அறிவிக்குமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனிவரும் காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் எமது போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்றும் போராட்ட வடிவம் மாற்றப்பட வேண்டும் என்றும் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பிடம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது-என்றுள்ளது. (அ-எ-26-27)

## பொலிஸாரைக்....

பிரயோகம் நடத்த கட்டளையிட்ட கேகாலை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரையும், துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் உடனடியாகக் கைது செய்யுமாறு கேகாலை நீதிவான் பொலிஸ் மா அதிபருக்கு நேற்று உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கேகாலை நீதிவான் வாசனா நவரத்ன இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அதேவேளை, ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தின்போது உயிரிழந்த நபர் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஏற்பட்ட காயங்கள் காரணமாகவே உயிரிழந்தாரென உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டது. (அ-எ-இ)

## மக்களின்...

மக்கள் வலியுறுத்திவரும் நிலையில், சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முயற்சிகளை ஆரம்பித்துள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின் முதன்மைக் கோரிக்கையாக உள்ள நிலையில், சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் ஜனாதியின் நகர்வுகள் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படுகின்ற கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதியின் கையொப்பத்துடன் நேற்றுக்கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

### நாளை கலந்துரையாடல்

நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றுக்காக ஜனாதிபதி மாளிகைக்கு வருமாறு அந்தக் கடிதத்தில் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பதவி விலகிய பின்னர் ஸ்தாபிக்கப்படவுள்ள சர்வகட்சி அரசாங்கம் தொடர்பிலேயே இந்தக் கலந்துரையாடலின்போது ஆராயப்படவுள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தின் வியூகம், கால எல்லை, பொறுப்புக்களை யாருக்கு வழங்குவது போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி தயாராகிவருகின்றார். நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு கொள்கையளவு இணங்கியுள்ள ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமான அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு தீர்வைக்காண சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள், பேராயர் உட்பட ஆன்மிகத் தலைவர்களும், சில அரசில் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் கோரிக்கை விடுத்திருந்தன. இதற்கமையவே கொள்கை அடிப்படையில் தான் இந்த முடிவை எடுத்தார் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

### ஆதரவில்லை

அதேவேளை, ஜனாதிபதி பதவியில் கோத்தாபய ராஜபக்ச நீடிக்கும்வரை எந்தவொரு அரசாங்கக் கட்டமைப்புக்கும் ஆதரவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அறிவித்துவிட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளும் இதே நிலைப்பாட்டில் உள்ளன. இந்தநிலையில் சர்வகட்சி அரசாங்கம் சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. (அ-எ-44)

## பதவி...

என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பதவி விலகுமாறு இதுவரை அவர் எனக்குக் கூறவில்லை, இனிக் கூறப் போவதுமில்லை என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளை நேற்று அலரி மாளிகையில் சந்தித்தபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகக்கூடாது என்று உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளும் மாவட்டத் தலைவர்களும் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## உங்களைப்...

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளதாவது:-

தென்னிலங்கை மக்கள் நெருக்கடி நிலைமைக்கு எதிராக பெரும் எழுச்சியுடன் போராடி வருகின்றனர். தென்னிலங்கை மக்களின் இந்த எழுச்சியின் நியாயத்தை, கடந்த காலங்களில் பேரவலத்தைச் சந்தித்த இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களாகிய நாம் புரிந்து கொள்கின்றோம், உணர்ந்து கொள்கின்றோம். மதிக்கின்றோம்.

ஆனால், இந்த நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமான தமிழ் மக்கள் மீது காலம்காலமாக கட்டவிழ்த்து விடப்பட்ட பெரும் அடக்குமுறைகள் இப்போதுவரையில் தொடர்ந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது. இந்தத் தருணத்தில் சிங்கள மக்கள் தமிழ் மக்களாகிய எமது வலிகளையும், நியாயங்களையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம்.

உங்களைப் புரிந்து கொள்கின்றோம், எங்களைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதே தமிழ் மக்களின் ஒருமித்த குரலாக இருக்கின்றது என்பதை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது - என்றுள்ளது. (எ-இ)

## 22 வயது...

உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை நடந்துள்ளது.

இந்த இளைஞன் அண்மைய நாள்களில் கைபேசியில் தொடர்ச்சியாக "கேம்" விளையாடி வந்தார் என்றும், அதனால் மனக்குழப்பமடைந்து இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்றும் இறப்பு விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களாக கைபேசியில் போரிடும் "கேம்" விளையாடுவது இளைஞனின் வழக்கமாக இருந்துள்ளது. ஒரு கட்டத்தில் அவர் அதில் மூழ்கியிருந்தார் என்று கூறப்படுகின்றது. இந்தநிலையில் நேற்றுக்காலை அவர் தனது அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

இளைஞன் சடலம் காதில் மாட்டப்பட்ட ஹெட்செட் மற்றும் சட்டைப்பையில் கைபேசி என்பவற்றுடன் காணப்பட்டுள்ளது.

இளைஞரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கைபேசி வீடியோ கேம்களால் சிறுவர்களும், இளைஞர்களும் மனக்குழப்பங்களுக்குள்ளாகும் பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதிகமாக இந்தியாவில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தொடர்ச்சியாக அவற்றில் மூழ்கியிருந்த இளைஞர்கள், மனக் குழப்பமடைந்து உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவங்கள் தொடர்பாகவும் தகவல்கள் அவ்வப்போது வெளிவருகின்றன. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ய-159)



பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான செயலாளர் என்.விந்தன் கனகரட்ணம் மற்றும் அறக்கட்டளையின் நிர்வாகிகளால், கிளிநொச்சி, பூநகரி முட்கொம்பன் பகுதியைச் சேர்ந்த பொருண்மியம் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் ஒன்றும் பிள்ளைகளுக்கான புத்தகப் பைகள் மற்றும் கற்றல் உபகரணங்களும் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (ய-20)



# அமெரிக்கத் தூதுவர் வருகை; இருளானது யாழ்.பொதுநூலகம்

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சங் நேற்றுச் சென்றிருந்த போது, சிறிது நேரம் அங்கு மின்சாரம் தடைப்பட்டது. நூலகத்திலிருந்த மின்பிறப்பாக்கி, திடீரென இயங்காத காரணத்தால், தூதுவர் குழு சிறிது நேரம் இருட்டில் நூலகத்தைப் பார்வையிட நேர்ந்தது. பின்னர் மின்சார சபை ஊழியர்களின் உதவியுடன் மின்பிறப்பாக்கி சரி செய்யப்பட்டு மின் விநியோகம் சீர் செய்யப்பட்டது. இதற்குப் பதிலளித்த மாநகரசபை ஆணையாளர், மின்பிறப்பாக்கி இயங்காதது உண்மைதான். ஆனால் அது உடனடியாகச் சரி செய்யப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது -என்றார். (சு-20)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற 1976ல் பிறந்த விவாகரத்துப் பெற்ற இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த எஞ்சினியர் மணமகனுக்கு பெற்றோர் உள்நாட்டு/வெளிநாட்டு அழகிய படித்த மண மகளை எதிர்பார்க்கின்றோம். மணமகனுக்கு மூன்றாம் இடத்தில் சூரியன், செவ்வாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புக்கு:- 077 2659 883, 077 9530 606

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் கிச்சன் பான்றி கபேட் வேலை செய்வதற்கு, தச்சு வேலையில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது கிச்சன கபேட் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

077 358 0547

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் **புடைவைக் கடை** ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் மற்றும் வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். (சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

077 172 3554

## தவறிவிட்டது

இளவாலை விளாவெளி வீதியில் கடந்த 24.04.2022 அன்று முக்கிய தகவல்கள் அடங்கிய பென்றைவ் (Pendrive) சிவப்பு நிறம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். (10.000/ரூபா சம்மானம் வழங்கப்படும்.

அ.அமலவினோத்
077 264 6290, 076 867 3852

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வயாவிளானில் 87 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு.

- வயாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி) 1km தூரம்.
- வயாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
- 14 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை ஐந்து இலட்சம்
- அச்சுவேலி-தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்

(CS 19484) (4/6)

074 043 6599, 074 043 6375

## கண்ணீர் அஞ்சலி

தகைசார் பேராசிரியை

### திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன்

(முன்னாள் தலைவர், இரசாயனவியற்துறை மற்றும் முன்னாள் முதல்வர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



எமது பெருமதிப்புக்குரிய ஆசானும் வழிகாட்டியுமான தகைசார் பேராசிரியை இராஜேஸ்வரி மகேஸ்வரன் அவர்களின் மறைவுக்கு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டி நிற்கின்றோம்.


ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க!
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!

மீனா செந்தில்நந்தனன் குடும்பத்தினர்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(cs19517) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 02 . 1944



மறைவு 24 . 04 . 2022

### திருமதி தேவராசா அருந்தவநாயகி

யாழ். ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவராசா அருந்தவநாயகி அவர்கள் கடந்த (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசு பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தேவராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் சிவபாதலிங்கம் ஆகியோரின் சகோதரியும், தவராஜா, காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் செந்தில்நாதன் ஆகியோரின் மைத்துனியும், பாபுஜி (ஹொலன்ட்), பாலாஜி (சுவிஸ்), விஜிதா, ரஜிதா (கொழும்பு), தேவவதனா (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
077 958 5838

தகவல்
குடும்பத்தினர்.

(CS 19532) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.